பக்கங்கள் 8    விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 30   பங்குனி 10 ஈழ ஆண்டு 13   இதழ் 41
யாழ்ப்பாணம்   வியாழக்கிழமை   23-3-78

சன்சயின் சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
இது ஓர் லாலா தயாரிப்பு
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## டி. எஸ். சிலைக்கு அஞ்சலி

(கொழும்பு)

அமரர் டி. எஸ். சேனநாயக்க ஞாபகார்த்த தினத்தையொட்டி பல நிகழ்ச்சிகள் நேற்று கொழும்பில் இடம் பெற்றன.

தேசிய அரசுப் பேரவை வளவிலுள்ள டி. எஸ். சேனநாயக்கா சிலைக்கு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். பிரதம மந்திரி திரு ஆர் பிரேமதாஸ மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

### கலேவல பொலிசாரிடம் புகார் செய்யச்சென்றபோது

# யாழ்ப்பாணத்துக்கு போய் புகார் செய்ய சொன்னார்கள்

## ஏனையா பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் என்றேன் 'நீங்கள்செய்தபிழைக்கு உங்களுக்குநடக்கிறது' என்றார் இன்ஸ்பெக்டர்

### கலேவல புகையிலைக் கடைக்காரர் சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியம்

— நமது நிருபர் கா. யோகநாதன் —
[யாழ்ப்பாணம்]

''கலேவலயில் இனக்கலவரம் நடந்தபோது அங்குள்ள பொலிஸில் சென்று முறைப்பாடுசெய்தேன். யாழ்ப்பாணத்துக்குப் போய் முறைப்பாடு செய்யும்படி கூறினார்கள்'' என்று நேற்று சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியமளித்த கலேவல புகையிலைக் கடை உரிமையாளர் கந்தையா சுப்பிரமணியம் என்பவர் கூறினர்.

அங்கிருந்த சப் இன்ஸ்பெக்டர் செல்வராசா றைபிளுடன் வெளியில் சென்றபோது இன்ஸ்பெக்டர் தடுத்துவிட்டு அவரை பொலிஸ் நிலையத்திலே இருக்கும்படி சொன்னதாகவும் சாக்ஷி கூறினர்.

''இப்படியெல்லாம் நடக்க ஏனையா பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டபோது நீங்கள் செய்தபிழைக்கு உங்களுக்கு நடக்கிறது என்று இன்ஸ்பெக்டர் கூறியதாகவும் அவர் கமிஷனிடம் கூறினர்.

கலேவல புகையிலைக்கடை உரிமையாளர் கந்தையா சுப்பிரமணியம் தமது சாட்சியத்தில் கூறியதாவது; கலேவலவில் பொலிஸ் நிலையம் இருக்கிறது. அங்கு 5 தமிழர் கடைகள் உண்டு.

ஆகஸ்ட் 17ம் திகதி நான் அம்மன் கோவிலில் இருந்தேன் அப்போது கடைகளை உடைக்கிறார்கள் பூட்டி விட்டு இருங்கள் என்று சிங்கள பெண் ஒருவர் கூறினர். நான் கோவிலுக்குள் இருந்தேன் 10 பேர் கோயிலுக்குள் வந்து எனக்கு அடித்தனர். கோவில் ஐயருக்கும் அடித்தனர்

நான் பொலிஸ் நிலையத்திற்குப் போனேன் பொலிசார் முறைப்பாட்டை எடுக்கவில்லை. யாழ்ப்பாணம் பொலிசுக்குப் போய் புகார் செய்யும்படி கூறினர்

கமிஷனர்: யாழ்ப்பாணம் எத்தனை மைல்:-175 மைல

கமிஷனர்: 175 மைல் போய்ப் புகார்செய்யச்சொன்னரர்களா?-ஆம் இங்கே புகார் செய்ய இயலாது. யாழ்ப்பாணம் போ என்றனர். அப்போது கொள்ளை நடந்து கொண்டிருந்தது. பொலிஸ் நிலையத்திலிருந்து கடைகளைப் பார்க்கலாம் பொலிசார் தடுக்கவில்லை

சப் இன்ஸ்பெக்டர் செல்வராசா இருந்தார் அவர் வெளியில் போனபோது குண்டர்கள் தாக்கிக்கொண்டிருந்தார்கள். அவர் வந்து றைபிளை எடுத்துக்கொண்டு சென்றபோது இன்ஸ்பெக்டர் தடுத்துவிட்டார் அவரைப் பொலிஸ்நிலையத்தில் இருக்கும்படியும் தான் போய்ப் பார்த்துவருவதாகவும் கூறி இன்ஸ்பெக்டர் சென்றார் அவருக்கு முன்னிலையிலும் கடைகளை உடைத்துக்கொண்டிருந்தனர் நான் மேல் மாடியில் நின்று பார்த்துக்கொண்டிருந்தேன் சப் இன்ஸ்பெக்டர் செல்வராசாவுக்கு பலத்த யோசனை அங்குமிங்குமாக உலாவிக் கொண்டிருந்தார் வேறு பொலிசாரும் இருந்தனர்

நான் பொலிஸ் அறையில் இருந்தேன் கொழும்பிலிருந்து தகவல் வந்தது "எனக்குச் சேதமா?" என்று கேட்டனர் 4 கடைகளில் ஒன்றைத் தாக்கிவிட்டனர் நாங்கள் கவனித்துக் கொள்கிறோம் எனப்பொலிஸார் பதிலளித்தனர் ஆனல் ஒன்றும் நடக்கவில்லை

கமிஷனர்: எப்படி தகவல் வந்தது?- டெலிவிஷனில்

சட்டத்தரணி: டெலிவிஷனல்ல றேடியோவில்?-ஆம். கொஞ்சப்பேர் பொலிஸ் நிலையத்திற்கு முன்னல் நின்றனர் நாங்கள் மேல்மாடியில், லைட்டை அணைத்துவிட்டு படுத்துவிட்டோம்?

றேடியோவில் அனுப்பப்பட்டது பொய்த்தகவல் அங்கு இருக்க விரும்பவில்லை மாத்தளைக்கு அல்லது யாழ்ப்பாணம் பஸ்ஸில் அனுப்புமாறு கேட்டோம்.

### நீங்கள் செய்த பிழை

இன்ஸ்பெக்டரிடம் இப்படியெல்லாம் நடக்க ஏனையா பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டேன்.

'நீங்கள் செய்த பிழைக்கு உங்களுக்கு நடக்கிறது. நாங்கள் என்ன செய்யமுடியும்' என்று இன்ஸ்பெக்டர் சொன்னர்.

பின் பஸ்ஸில் கண்டிக்குப் போனேம். பொலிஸ் சார்ஜன்ட் றைபிளுடன் பாதுகாத்துவந்தார் 100 பேர் பஸ்ஸில் போனேம். கண்டிப் பொலிஸ் நிலையத்தில் இறக்கிவிட்டனர். எங்களின் வேலை முடிந்துவிட்டது. இனி உங்களை பார்த்துக்கொள்ளுங்கள்' என்று சார்ஜன்ட் கூறினர்.

### ஒருவர் மரணம்

வேறு இடங்களிலிருந்தும் அகதிகள் வந்தனர் காயத்துடன் வந்தனர். ஒருவர் மரணமடைந்திருந் தார். கண்டிப் பொலிஸ் நிலையத்திற்குள்

(5ம் பக்கம் பார்க்க)

## இதுவரை 179 பேர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் சன்சோனிக் கமிஷன்முன் நேற்றுவரை 179 பேர் சாட்சியமளித்துள்ளனர்.

ஆறுபேர் ரகசியமாக சாட்சியமளித்தனர். 23 தினங்கள் விசாரணை நடைபெற்றுள்ளது.

இன்றுடன் விசாரணை முடிந்து மீண்டும் இம்மாதம் 28-ம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் 11-ம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் இம்மாதம் 28-ம் திகதி வவுனியா சம்பவங்கள் பற்றிய விசாரணை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



வெளிவந்துவிட்டது!

இது ஒரு வரதர்வெளியீடு

அனுபவம் பேசுகிறது
அமிர்தலிங்கம்

பேட்டிகண்டு எழுதியவர்;- "சாமிஜி"

தமிழர் தலைவரின் புதிய உறுதியான கருத்துக்களை ஒவ்வொரு தமிழனும் அவசியம் படிக்கவேண்டும்
விலை ரூபா: 3-80
ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

# 'உதவிசெய்து ஊக்குவித்த சிங்கள நண்பர்கள்'

(யாழ்ப்பாணம்)

"நான், அகதியாக இங்கு வரும்போது சந்திரசிறியும், இந்திரசேனவும் கவலைப்பட்டனர். மீண்டும், கல்கமுவா வந்து கடை நடத்தும்படி கூறி வழியனுப்பினார்கள். இங்கு வந்த பின்பும், கல்கமுவா வருமாறு கடிதம் எழுதினார்கள். நான் மீண்டும் போய்க் கடையை ஆரம்பித்தேன். அவர்கள்தான் பண உதவியளித்து, எனக்கு ஆதரவளித்து ஊக்குவித்தனர்" என்று சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளித்த கல்கமுவ வர்த்தகரான சின்னத்துரை சிவஞானமூர்த்தி கூறினார்.

சின்னத்துரை சிவஞானமூர்த்தி கூறியதாவது: 'கல்கமுவாவில் கடை வைத்திருந்தேன். ஆகஸ்ட் 13ந் தேதி என் கடை தாக்கப்பட்டது.

"17ந் தேதி காலை யாழ்ப்பாண ரயில் கல்கமுவ ரயில் நிலையம் வந்தது. ரயிலில் வந்த பிரயாணிகள், தமிழர் கடைகளைத் தாக்குங்கள் என்றனர். ஆனால் தமிழர் கடைகள் பூட்டப்பட்டிருந்தன.

## இந்திரசேன உதவினர்

இந்திரசேன என்பவர் தமிழ் வியாபாரிகளுக்கும் பெரும் உதவியாக இருந்தார். 17ந் தேதி பாதுகாப்பளித்தார். சப் இன்ஸ்பெக்டர் குணசேனவும் உதவியாக இருந்தார்.

"18ந் தேதி இஞ்ஜினியர் நவருபன் சூடு சம்பந்தமான விசாரணைக்கு சென்றுவிட்டார். அவர் போனபின்னரே கல்கமுவாவில் தாக்குதல் ஆரம்பமானது. பின்னர் சார்ஜன்ட் தர்மதாசா பொறுப்பாக இருந்தார். பொலிஸ்நிலையம் 150 யார் தூரத்தில் இருந்தது.

"2-30 மணிக்கு விநாயகம் ஸ்ரோர்ஸ் உடைக்கப்பட்டது. இச்சம்பவத்தில் ஒருவரைக் கைதுசெய்தனர்.

சந்திரசிறி என்பவர் எங்களுக்குப் பாதுகாப்பளித்தார். 18ந் தேதி எனது கடை தாக்கப்பட்டது. பொலிஸ் முன்னிலையில் எனது கடை தாக்கப்பட்டது. 6 பொலிசார் நின்றனர். அவர்களிடம் றைபிள் இருந்தது. 'சும்மா இருப்போம்; வேண்டுமானால் எதுவும் செய்யுங்கள் என்றனர்'. பின் சோமசுந்தரம் கடை தாக்கப்பட்டது.

"நான் சந்திரசிறியுடன் காட்டுக்குள் சென்று 19ந் தேதி இரவு வரை தங்கினேன். அவர் பாதுகாப்பளித்து உணவு வழங்கினார். அதன் சப் இன்ஸ்பெக்டர் வந்து ஜீப்பில் கூட்டிச் சென்றார். பின் குருநாகலுக்கு வந்தோம். எனக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா நஷ்டம்.

"நான் இங்குவரும் போது சந்திரசிறியும் இந்திரசேனவும் கவலைப்பட்டனர். மீண்டும் கல்கமுவ வந்து கடை நடத்தும்படி கூறினார்கள் இங்கு வந்ததும், திரும்பிவரும்படி பல கடிதங்கள் எழுதினார்கள் நான் மீண்டும் போய் கடையை ஆரம்பித்தேன். அவர்கள்தான் பண உதவியளித்து என்னை ஊக்குவித்தார்கள்."

"வெளியார் வந்து கொள்ளையடித்ததால் சிங்களவர் என்ற முறையில் தமிழர் மீண்டும் வியாபாரம் செய்ய உதவுகிறோம் என்றனர்.

## வங்கிக் கடன்

"எனக்கு 40,000 ரூபா வங்கிக் கடன் இருக்கிறது. அவர்கள் காசைக் கட்டும்படி வலியுறுத்துகிறார்கள். என் கட்டடத்தை ஏலமிடப்போவதாகப் பயமுறுத்துகின்றனர்.

## 'கடை உடைத்து, கொள்ளையடித்து வேலையில்லை ஒரு தமிழனையாவது கொல்லவேண்டும்'

வங்கி மனேஜரிடம் சென்று என் நிலைமையைக் கூறினேன். உமக்குத் தந்த தவணை முடிந்தது. இதற்கு மேல் ஒன்றும் செய்யமுடியாது என்று கூறினார்."

## தமிழனைக் கொல்லுங்கள் என்றார்கள்

கல்கமுவாவைச் சேர்ந்த வர்த்தகரான குணவர்த்தனம் சுந்தரேஸ்வரன் கூறியதாவது:

"நானும் தகப்பனும், ஒருகடை நடத்திவந்தோம். அது 2 லட்சம் ரூபா பெறுமதியானது. கல்கமுவாவில் தமிழ் கடைகள் உண்டு. கடைகள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டது. என்கடை தாக்கப்பட்டபோது பின்பக்கத்தால் போய் ஒளித்திருந்தேன். என் கடைப்பக்கம் ஒரு இராணுவ ஜீப் வந்ததைக்கண்டேன். இராணுவத்தினர் கொள்ளையர்களிடம்; "கடையை உடைத்து வேலையில்லை. ஒரு தமிழனையாவது கொல்லவேண்டும்" என்றனர். நான் பயந்து படபடத்து மேல் மாடிக்குச் சென்று பதுங்கினேன். பின் இரவு பொலிஸ் நிலையம் சென்றேன். நாங்கள் ஓடிவந்தபோது, வழியில் நின்ற சிங்களவர்கள் தமிழர் ஓடுகிறார்கள் என்று கூறி கல்லால் எறிந்தனர். குருநாகல் சென்று அங்கிருந்து கண்டி போய் இங்குவந்தோம்."

## பாதிக்கப்பட்ட இந்தியத் தமிழர்கள்

கல்கமுவ நிலஅளவை உதவி சுப்பிண்டன் தம்பிஐயா பாலசுப்பிரமணியம் கூறியதாவது: "ரயில் நிலையத்திற்குச் சமீபத்தில் என்துவீடு இருக்கிறது. ஆகஸ்ட் 17-ம் தேதி தமிழர்களை தாக்குவதாகவும், கடைகள் கொள்ளையடிக்கப்படுவதாகவும் அறிந்தேன். 19-ம் தேதி இரவு சோமசுந்தரத்தின் இபேட்டர் எரிக்கப்பட்டது. 18-ம் தேதி குண்டர்கள் மாஹோவிலிருந்துவருவதாக தகவல் கிடைத்தது. கல்கமுவ வைத்திய அதிகாரி ஒருதமிழர்போவது பாதுகாப்பில்லை என்று அறிந்தேன். நானும் மனைவியும் மாகல்கமுவ என்ற கிராமத்திற்குச்சென்றோம் என்னைத்தொழிலாளி ஒருவர் கூட்டிச்சென்றார். நாலுகுண்டர்கள், தொழிலாளி சிறிசேனவை அடித்தனர். 18ம் தேதி இரவு அங்குள்ள குடிசைகள் எல்லாம் எரிக்கப்பட்டன. அக

[7-ம் பக்கம் பார்க்க]


யாழ். மத்திய கல்லூரி
பரி. யோவான் கல்லூரி

**80-வது கிரிக்கற் போட்டி**

காலம்: வெள்ளிக்கிழமை 31-3-78
சனிக்கிழமை 1-4-78.

இடம்: யாழ் மத்திய கல்லூரி மைதானம்

ரூபா 15/- கொண்ட முன் கூட்டியே பதிவுசெய்யக் கூடிய ஆசனங்களுக்கு மட்டுமே நுழைவுச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்படும்

இரு கல்லூரிக் காரியாலயங்களிலும் 16-3-78 வியாழக்கிழமை முதல் நுழைவுச் சீட்டுக்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்.

நின்று பார்க்கக் கட்டணம் செலுத்தவேண்டியதில்லை.

அதிபர்
பரி. யோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

8731



### நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் ஈடு/ 12860

1. அம்பலம் வேலுப்பிள்ளையும் பெண்
2. சிவகாமசுந்தரவல்லியும் இருவரும், பன்னாலை தெல்லிப்பளை

வழக்காளிகள்

எதிராக

1. அம்பலவாணர் கதிர்காமத்தம்பியும் பெண்
2. திலகவதியும் இருவரும் தெல்லிப்பளை தென்மேற்கு தெல்லிப்பளை

எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 5-ம் திகதி (5-5-78) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த 2ம் வழக்காளிக்கு ரூபா 6931/-ம் மேலும் முதல் ரூபா 5000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 8 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1971-ம் ஆண்டு மார்கழி மாதம் 3-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1972-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21-ந் திகதி வரையுமான வட்டியும், அதன் பின்னர் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 512-97 கொடுக்க வேண்டியிருப்பதாலும், இதில் செலவில் ரூபா 125/-ம் தீர்வைத் தொகையில் ரூபா 5600/-ம் கொடுபட்டது.

#### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று தெல்லிப்பளை தென்மேற்கிலை "தெல்லொல்லை" நிலப்பரப்பு நாலு [4] ளுளி பதினைந்தும் (15) பனைகளும் தென்னைகளும். எல்லை கிழக்கு சபாநாயகம் பொன்னம்பலப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் வடக்கு சங்கரப்பிள்ளை பொன் வேதநாயகத்தினுரிமைக்காரிலுதனம், மேற்கு கதிரிப்பிள்ளை சோதிநாகரத்தினத்தினுதனம், தெற்கு குறித்த சோதி நாகரத்தினத்தினுதனமும், தீர்வை நிலமும், எதிராளிகளுக்குரிய காணியும் இது அடங்கலும் தெற்கே இருக்கும் பொதுத் தீர்வை நிலம் குளி ஒன்பதில் மூன்றிலொரு பங்கும், கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும், கிழக்கெல்லையோரமாக தெற்கெல்லை ஒழுங்கைக்கு இக்காணியிலிருந்து போக்குவரவு செய்யும் ஐந்து முழ அகலங்கொண்ட ஒழுங்கைப் பாவிப்புரித்தும்.

சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், விலைமதிப்பாளரும்.

'வடிவேல் உதயம்'
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.
10-3-78

8824



### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

சோலைவரி 1ம்கந்தாயம் 1978

1978-ம் ஆண்டு 1ம் கந்தாயத்திற்கான சோலைவரிப் பணம் 31-3-78ம் திகதி பி. ப. 3-00 மணிக்கு முன்னதாக மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் செலுத்தப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக 10% வெளியாத்துப்பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற்கட்டளைகள் முதலியன, யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின் சார்பில், தபாற்சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரி மதிப்பு இலக்கமும், வீதியின் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களுடன்வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

க. சிவஞானம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
22-3-78

8832



### நெசவாளர் தேவை

கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கைத்தறிநெசவு நிலையத்துக்கு அனுபவமுள்ள நெசவாளர் தேவை. 5-4-78க்கு முன் மனுச்செய்யவும்.

பொதுமுகாமையாளர்
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

8829



### அறிவித்தல்

எமது பாவனையிலுள்ள மோட்டார் வாகனங்களிலிருந்து கழிக்கப்பட்ட உதிரிப் பாகங்களும், வேறு பல உறுப்புகளும் 25-3-78 சனிக்கிழமை காலை 9-00 மணியிலிருந்து விற்பனையாகும்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
420, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 8833



## வரி விளம்பரம்

### தேவை

யந்திர இயல்மூலம் எலக்ரோ பிளேட்டிங், அலுமீனிய உற்பத்தி முதலியவற்றின் வேலைகளுக்கு பயிற்சிபெற்று வேலை செய்ய இளம்வாலிபர்கள் தேவை. பயிற்சிக்காலத்தில் வேதனம் வழங்கப்படும். எலக்ரோ பிளேட்டிங் வேலைக்கு இரசாயண இயலை பாடமாக கொண்டு சித்திபெற்றவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். பிள்ளையார் மெற்றல்வேக்ஸ் 251, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 8830

ஸ்ரீலங்கா புகையிலைக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் தயாரிப்பான "ஜனதா பீடி" சுற்றுவதற்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் பெண்பிள்ளைகள் எம்முடன் தொடர்பு கொள்க. "ராணி பவனம்" ஸ்ரீ ரஞ்சன வீதி, கிராமக்கோட்டடி, புலோலி. 8820

மில்லில் வேலை செய்வதற்கு கூலியாட்களும் கங்காணியும் தேவை கூலி நாளொன்றுக்கு 15/- வீதம் கொடுக்கப்படும். தூர இடத்திலிருப்பவர்கட்கு இலவசமாக தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும். நேரில் அடையாள அட்டையுடன் வரவும். காலை 7 மணியிலிருந்து 9 மணிவரையும் முன்பு மில்லில் வேலை செய்தவர்கட்கும் மில்வேலை தெரிந்தவர்களுக்கும் முதலிடம் கொடுக்கப்படும். பரமசிவம் அரிசி ஆலை, கே. கே எஸ். வீதி, குளப்பிட்டிசந்தி, கொக்குவில். 8827

அனுபவம்வாய்ந்த அச்சுகோப்பாளர் மூன்று மொழியும் தெரிந்த ஒருவரும், புத்தகங்கள்கட்டும் வேலையில் தேர்ச்சி பெற்ற ஒருவரும் உடன் வரவும். தங்கராஜா அச்சகம், 39/3, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 8826

### விற்பனைக்கு

புளியம்பொக்கணையில் சகாய விற்பனை! 24-3-78 புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் பொங்கல் தினத்தன்று எமது விளம்பர விற்பனை வாகனத்தில் மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனை நடைபெறும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் எமது விளம்பர வாகனத்தில் கொடுத்து சிறந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 8815

புடவைக் கடைகளுக்கும், சாய்ப்பு கடைகளுக்கும் தேவையான பாவித்த கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்குண்டு. சரஸ்வதி ஸ்ரோஸ், 55, பெரிய கடை, யாழ்ப்பாணம். 8825

ஈழநாடு
The Eelanaadu

## இடைத்தேர்தல் தீர்ப்பு

கொழும்பு மேற்குத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இடைத் தேர்தலில் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் லத்தாயிரத்துக்கும்திகமான வாக்குகளால் பெருவெற்றியீட்டியுள்ளார்.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதியாகப் பதவி யேற்றதனால் அவர் தமது தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து காலியான ஸ்தானத்துக்கு இந்த இடைத்தேர்தல் நடைபெற்றது.

இந்த இடைத் தேர்தலில் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் ஏழாண்டு காலம் ஆட்சிபீடத்திலிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அந்தக்கட்சியுடன் சுமார் ஐந்தாண்டுக்காலம் கூட்டுச்சேர்ந்து ஆட்சிபீடத்திலிருந்த லங்காசமசமாஜக் கட்சியும் வேட்பாளர்களை நிறுத்தியிருந்தன. இந்த அபேட்சகர்கள் தவிர ஐவர் சுயேச்சையாகவும் போட்டியிட்டனர்.

சுயேச்சைகளை இந்த நாட்டுவாக்காளர்கள் நம்பவில்லை என்பது கடந்த பொதுத்தேர்தலில் தெளிவாக நிரூபிக்கப்பட்டிருந்தது. இந்த இடைத்தேர்தலிலும் இது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இடைத்தேர்தல் பிரசாரத்தின்போது சுதந்திரக் கட்சித் தலைவர்களும் இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்களும், ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பொய் வாக்குறுதிகளைக் கூறி ஆட்சிபீடத்துக்கு வந்ததென்றும் வாழ்க்கைச் செலவு மேலும் அதிகரித்திருப்பதுடன் இலவச அரிசியையும் இல்லாமல்செய்து விட்டதென்றும் குற்றம் சுமத்தினார்கள். ஆனாலும் ஆட்சிபீடத்தில் ஏழாண்டு காலம் இருந்தவர்கள் செய்தவற்றை இன்னமும் மக்கள் மறந்துவிடவில்லை யென்பதையேஇந்தஇடைத் தேர்தல் முடிவு எடுத்துக் காட்டுகிறது.

இதேசமயம் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்துஇன்னும் சரியாக ஒரு வருடம்கூட ஆகவில்லை இன்னும் சிறிது அவகாசம் கொடுத்து அவர்கள் ஆக்கபூர்வமாக ஏதாவது செய்கிறார்களாவென்று பொறுத்துப் பார்ப்போம் என்பதையும் கொழும்பு மேற்குத் தொகுதி வாக்காளர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

இந்த இடைத்தேர்தல் முடிவிலிருந்து சுதந்திரக் கட்சியினரும் இடசாரிக் கட்சிகளும் அரசாங்கம் தனது திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அவகாசம் கொடுத்துப் பொறுத்திருந்து பார்க்கத்தான் வேண்டுமென்ற முடிவுக்கு வருவதே விவேகமாகும்.

## விநியோகம்

(காரைநகர்)

காரைநகரிலுள்ள ஊரிக்கிராமத்திற்கு குழாய்நீர் விநியோகம் செய்வதற்கான ஆக்கபூர்வமான வேலைகள் யாவும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இதன் ஆரம்ப வேலையை நோர்வே நல்லொழுக்க வாலிபர் இயக்கத் தலைவர் திரு. ஆர்னேபீயேற் இம்மாத இறுதியில் ஆரம்பித்துள்ளார். (இ)

### குடித்து கும்மாளம் அடித்துக்கொண்டிருந்த பொலிசார்

# "இந்தநேரத்திலா கரைச்சல் தருவது" என்று ஏசினர்கள்

## தம்புள்ள வாசிக்கு நேர்ந்த கதி!

(யாழ்ப்பாணம்)

"6 லட்சம் ரூபா பொருட்களை இழந்து ஆதரவற்ற நிலையில் பொலிஸ் நிலையத்திற்கு உதவி நாடிச்சென்ற போது, அவர்கள் குடித்து வெறித்து கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தனர். என்ன இந்த நேரம் வந்து எங்களை கரைச்சல் பண்ணுகிறீர் என்று ஏசினர்கள்"

தம்புள்ள ஏ. எஸ். சகிகரப்பிள்ளை கடை மனேஜர் சுந்தரம்பிள்ளை சோமசுந்தரம் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: நான் ஏ. எஸ். சகிகரப்பிள்ளை கடையில் மனேச்சராக இருந்தேன். குண்டர்கள் வந்து கடையைத்தாக்கி கொள்ளையடித்தனர் என்னையும் அடித்தனர். கடை ஊழியர் ரத்தினராசாவை பலமாக தாக்கினர்.

நான் பின் பொலிஸில் முறைப்பாடு செய்யச்சென்றேன். அவர்கள் முஸ்பாத்தியாக இருந்தனர். எல்லாருக்கும் நிறைவெறி.

கமிஷனர்: குடித்திருந்தனரா?- ஆம். அந்தநேரம் முறைப்பாடு கொடுக்கக்கூடிய நிலையில் இல்லை.

இரவு 12 மணியிருக்கும். பொறுப்பாதிகாரி இல்லை. சார்ஜன் டேவிட் தான் இருந்தார். அவரும் குடித்திருந்தார் என்னை ஏசினர், இந்த நேரம் வந்தா எங்களை கரைச்சல் செய்வது என்றார்.

கமிஷனர்: எத்தனை மணி அப்போது? இரவு 12 மணிக்கு இராணுவ லொறியில் போனேன், பின் யாழ்ப்பாணம் வந்தபின் பொலிஸில் முறைப்பாடு செய்தேன். கடையைத்தாக்கிய மூன்று பேர்மீது தம்புள்ள கோட்டில் வழக்கு நடக்கிறது. இன்னும் வழக்கு முடியவில்லை. எனக்கு 6 லட்சத்து 35 ஆயிரம் ரூபா நஷ்டம்.

## நாளை ஸ்ரீராம பட்டாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை மாலை ஸ்ரீ ராமபட்டாபிஷேகத் திருவிழா நடைபெறவிருக்கிறது. பிற்பகல் ஐந்தரை மணிக்கு கவிஞர் வி. கந்தவனம் "கவியமைமாலை" என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்துவார். பின்னர் பட்டாபிஷேக உற்சவம் நிகழும்.

## சான்றிதழ்கள் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் இறிஸ்தவ கல்லூரி, பாடசாலையை விட்டு விலகியோருக்கான பயிற்சிவகுப்பு சான்றிதழ் வழங்கும் வைபவம் கல்லூரி அதிபர் திரு. கின்லையா சிவநேசனின் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் அதிபர் திரு. எஸ். தியாகராசாகலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்குவார். கோப்பாய் எம் பி திரு. இ. கதிரவேலுப்பிள்ளை, கல்விஅதிகாரி திரு. எஸ். இராமநாதன், திரு. வி. தங்கராசா ஆகியோர் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

இப் பயிற்சி வகுப்புகள் சென்ற ஆண்டு ஜூலை மாதத்தில் ஆரம்பமாகி டிசம்பரில் முடிவடைந்தன. அதன்பின்னர் நடந்த பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

# நெருங்கிப்பழகியவர்களே சுற்றிவளைத்து தாக்கினர்கள்

### சன்சோனி கமிஷன்முன் தமிழ் யுவதி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"எமது சுகதுக்கங்களில் பங்குபற்றி எம்முடன் அந்நியோன்யமாகப் பழகிய சிங்களவர்களே எம்மை சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தினர்" என்று அனுராதபுரத்தைச் சேர்ந்த செல்வி மூத்தையா சீதாலட்சுமி சன்சோனி கமிஷன் முன் நேற்று சாட்சியமளிக்கையில் கூறினர்.

அனுராதபுரம் வட்டுவகுளத்தைச் சேர்ந்த செல்வி மூத்தைய்யா சீதாலட்சுமி தனது சாட்சியத்தில் கூறியதாவது:

எங்கள் ஸ்ரோமத்தில் 60 சிங்களக் குடும்பங்களும் 25 தமிழ்க் குடும்பங்களும் இருந்தன பெரும்பாலானோர் விவசாயிகள். 3 தமிழர் கடைகள் வைத்திருந்தனர். அனுராதபுரம் பொலிஸ் பகுதியில் எங்கள் கிராமம் இருக்கிறது.

ஆகஸ்ட் 17ம் திகதி, அனுராதபுரம் நகரம் தாக்கப்பட்டதாக அறிந்தோம். கடைகள் உடைக்கப்படுவதாக தகவல் கிடைத்தது. அதுவரை எங்கள் கிராமத்திற்கு ஒன்றும் நடக்கவில்லை.

### விடியும்வரை தாக்குதல்

ஒரு இரவில் எங்கள் கிராமத்திலுள்ள 25 தமிழ் வீடுகளும் எரிக்கப்பட்டன. குண்டர்கள் இரவு 8 மணிக்கு வந்தார்கள். மறுநாள் விடியும்வரை சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தினர்கள்.

எங்கள் வீட்டுக்கு அயலில் உள்ள இளைஞர்கள்தான் தாக்குதல் நடத்தினர்கள். எல்லாரையும் எனக்கு தெரியும். அதுவரை காலமும் எங்களுடன் அன்னியோன்யமாக பழகிவந்தவர்கள். சுகதுக்கங்களில் பங்குபற்றியவர்கள் அவர்கள் தான், தாக்குதல் நடத்தினர்.

### எச்சரிக்கை

முதலில் சொல்லி அனுப்பினார்கள். இரவு வந்து நாசமாக்குவோம். தமிழர் ஒருவரும் வட்டுவகுளத்தில் இருக்கக்கூடாது என அறிவித்தார்கள். நாங்கள் பயந்து காடுகளுக்குள் சென்றுவிட்டோம். அவர்கள் வரும்போது தமிழர் ஒருவரும் அங்கில்லை.

### மரங்களில் ஆண்கள்

காட்டில் ஆண்கள் மரங்களில் ஏறிநின்று எரியும் வீடுகளைப் பார்த்துக்கொண்டிருந்தனர். நாங்கள் கீழே படுத்திருந்தோம். எங்கள் வீடுகள் எல்லாம் எரிந்துவிட்டன. ஒரு வீடும்மிச்சமில்லை. துவக்கு வெடிச்சத்தமும் கேட்டது.

18ம் திகதி காலை இராணுவ ட்றக்வந்து குளக்கட்டில் நின்று எங்களைவரும்படி கூப்பிட்டார்கள். காட்டுக்குள்ளிருந்து வந்தோம், பின் கச்சேரிக்குப் போனோம், வீடுகள் கடைகளை உடைத்துக்கொண்டிருந்தார்கள். இராணுவத்தினர், எங்கள் வீடுகளைப் போய்ப் பார்க்கவில்லை. எங்கள் உயிரை மட்டும் காப்பாற்றவே வந்தனர்.

### மாடுகளையும் கொள்ளையடித்தனர்

தற்போது கிளிநொச்சியில் குடியேறியுள்ளோம். அனுராதபுரத்தில் எங்களுக்கு நிலம் உண்டு. ஆண்கள்போய், வயல்வேலைகளை பார்த்துவிட்டு வருவார்கள், பெண்கள் ஒருவரும் போகவில்லை.

எங்கள் வீட்டிலுள்ள பொருட்கள் அத்தனையும் எரிந்துவிட்டன. 3500 ரூபா நஷ்டம். எங்களிடம் மாட்டுப்பட்டி ஒன்று இருந்தது. அதில் 25 மாடுகள் இருந்தன. மாடுகளையும் குண்டர்கள் கொள்ளையடித்துவிட்டனர். இதனால் 5000 நஷ்டம் ஏற்பட்டுள்ளது

### மணிவாக்கு

இலட்சியத்துக்குத் தம்மைப் பரிபூரணமாக அர்ப்பணம் செய்துவிட்டால் எவ்வளவு தாழ்ந்தவருடைய சேவையும் கடவுளுடைய சந்நிதானத்தில் தலைசிறந்தவருடைய சேவையைப் போலவே கருதப்படும்.

—காந்திமகான்



இலங்கை மன்றக் கல்லூரியில் இம்மாதம் 8ம் திகதி முதல் நடைபெற்ற "திரைப்படக் கலை" பற்றிய மூன்று நாள் கருத்தரங்கின்போது பிடிக்கப்பட்ட படம். அரசாங்கத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆதரவுடன் அமெரிக்கத் தகவல் சேவை நடத்திய இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்திருந்த திரைப்பட டைரக்டர் திரு லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், நடிகை திருமதி ஐராங்கனி சேரசிங்க ஆகியோரை அமெரிக்க தகவல் அதிகாரியான செல்வி, மேரி. இ. ஸ்மித் வரவேற்பதைப் படத்தில் காண்க.

# இன்றுரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வைத்திஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தில் நிகழஇருக்கும் ரதோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு விநாயகர், முருகன், சோமாஸ்கந்தர் தேவி, சண்டேஸ்வரர் ஆகிய பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ பூஜை ஆரம்பித்து உள்வீதிவலமாக வந்து யாகசாலையில் பூரணஆகுதி கொடுத்து காலை 8-15 மணிக்கு ரத ஆரோகணமாகி (பஞ்சமூர்த்திகளும்) பஞ்ச ரதங்களில் வெளிவீதி பவனி வந்து பக்தர்களுக்கு அனுக்கிரகம்செய்து காட்சிகொடுத்தருளுவார்கள்.

மாலை 5 மணிக்கு ரத அவரோகணமாகி (பஞ்மூர்த்திகளும் தேரில் இருந்து இறங்கி) முன்மண்டபத்தில் நடைபெறும் மண்டபப்படி பூஜையாகி ஆலயத்தில் வசந்த மண்டபம் சேருவர்.

# பங்கீட்டு முறையில் விறகு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கில் ஏற்பட்டுள்ள விறகுத் தட்டுப்பாட்டை அடுத்து அரசாங்க மரக்காலைகளில் பொதுமக்கள் நீண்ட கியூவில் மணிக்கணக்காகக் காத்திருந்து விறகு வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை அரசாங்க மரக்காலையில் நேற்றுமுன் தினம் அதிகாலையிலிருந்தே

### பொதுமக்கள் கஷ்டம்

பாவனையாளர் கியூவில் நின்று விறகு வாங்கிச் சென்றனர். அவ்வாறிருந்தும் விறகு பங்கீட்டு அட்டைக்கு தலா ஒரு தாக்கு வீதம் பங்கீட்டுஅடிப்படையில் விநியோகம்செய்யப் பட்டுவருகிறது.

(6ம் பக்கம் பார்க்க)

சன்சோனிக் கமிஷன் விசாரணை

# "கோவிலை உடைத்து விக்கிரகத்தை திருடினர்"

## மாகோ பூசகர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"மாகோ கதிரேசன் கோவிலை குண்டர்கள் உடைத்து கொள்ளையடித்ததுடன் விக்கிரகத்தையும் எடுத்துச் சென்றனர்' மாகோ கதிரேசன் கோவில் பூசகர் விஸ்வநாத ஐயர், சுப்பிரமணிய ஐயர் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

சுப்பிரமணிய ஐயர் மேலும் கூறியதாவது: 'கோவிலுக்கு அருகில் என்வீடும் இருக்கிறது. அங்கு என் மனைவியும் ஒரு பிள்ளையும் இருந்தனர்.

ஆகஸ்ட் 17-ம் திகதி குண்டர்கள் கோவிலைத்தாக்கினர்கள். நான் அப்போது அங்கில்லை. பூசையை முடித்துவிட்டு நாங்கள் காட்டுக்குள் சென்றுவிட்டோம். முதலில் எங்கள் வீட்டைத் தாக்கினர்கள். இரவு முழுவதும் காட்டில் இருந்தோம். மறுநாள் மாகோ பொலிஸ் நிலையத்திற்கு சென்று. அங்கிருந்து வவனியா வந்தோம்.

எல்லாமாக 175 பேர் ஒரு பஸ்ஸில் வந்தோம்.

கமிஷனர்: என்ன?-175 பேர் ஒரு பஸ்ஸில் வந்தோம்.

கமிஷனர்: எப்படி? மிக நெருக்கமாக வந்தோம். பின் மாகோபோகவில்லை. என் மகன் போனர். கோவில் கதவுகள் உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது என் றேடியோ நகைகள் மற்றும் பொருட்கள் கொள்ளையடித்து விட்டனர். எனக்கு 14,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது."

## யாழ். வீதியோரங்களில் குடியிருக்கும் அகதிகள்

### உதவி எதுவும் கிடைக்கவில்லையாம்

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் கலவரத்தின்போது அகதிகளாக வடக்கே வந்த 14 தமிழ் குடும்பங்கள் யாழ் நகர வீதியோரங்களில் குடியேறியுள்ளன.

யாழ். பொதுசன நூலகத்திற்கு முன்னல் உள்ள வீதியோரங்களில், 5 குடும்பங்கள், சீவித்துவருகின்றன.

இவர்கள் கல்கமுவ, அனுராதபுரம் பகுதிகளிலிருந்து வந்தவர்களாகும் இதுவரை எவ்வித உதவியும் கிடைக்கவில்லையென அக்குடும்பத்தை சேர்ந்த வயோதிபர் ஒருவர் தெரிவித்தார்.

வீதி ஓரத்திலேயே தினமும் சமைத்து சாப்பிட்டு நித்திரை செய்கிருர்கள். பெண்கள் குழந்தைகளும் இருக்கின்றனர். [க]

### சிங்களப் பெண் உதவிசெய்தார்

இலகளமீட்டியா நில அளவையாளர் இராசையா சந்திரசேகரம் கூறியதாவது:-

சம்பவம் நடந்ததினம் 2மணிக்கு சத்தம் கேட்டது, ஒரு கோஷ்டி வந்தது. நான் காட்டிற்குச் சென்றேன், சிங்களப் பெண் வந்து உதவிசெய்தார். 18ந் திகதி ஜீப்பில் இராணுவ முகாமிற்குச் சென்றேன், பின் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்தேன்.

"பொலிஸார்

## கொள்ளையை தடுக்கவில்லை; சுற்றிக் கொண்டிருந்தனர்"

### மாகோ கடை உரிமையாளர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

மாகோவைச் சேர்ந்த கடை உரிமையாளர் கணபதிப்பிள்ளை வல்லிபுரம் கணேசராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது;

"யாழ்ப்பாண ரயில் 17-ம் தேதி காலை மாகோ வந்தது. ரயில் நிலையத்திற்கு அருகில் தான் கடைகள் இருக்கின்றன. "தமிழர்களைக் கொல்லுங்கள், தமிழ்க்கடைகளை உடையுங்கள்" என்று ரயிலில் வந்த பிரயாணிகள் சத்தமிமிட்டனர். இதனுல் மாகோ வியாபாரிகள் பயப்பட்டனர்.

"மாகோவில் தமிழர்களுக்கு சொந்தமாக 16 கடைகள் இருந்தன. 5 கடைகளை வாடகைக்கு எடுத்து தமிழர்கள் நடத்தினர்கள். மத்தியானம் தமிழர்கடை எல்லாம் மூடப்பட்டன. நானும் கடையைப் பூட்டிவிட்டேன். என் வீட்டில் பேரன் இருந்தார். அவரைக் கூட்டிவரும்படி, என் கடை ஊழியரை அனுப்பினேன்.

### 16 கடைகளுக்கும் தீவைத்தனர்

"கடைகளை கொளுத்தப் போவதாக கதைக்கிருர்கள் என்று கடை ஊழியர் வந்து சொன்னர். கடைக்குப்பின்னல் குண்டர்கள் வந்தனர். நாங்கள் பொலிஸ் நிலையம் போனேம். அங்கிருந்து கடைகளைப் பார்க்கமுடியும். 16 கடைகளையும் கொள்ளையடித்து தீவைத்தனர். 5 வாடகை கடைகள் எரிக்கப்படவில்லை. அக்கடைகளின் நிலைகளை பெயர்த்துக்கொண்டு சென்றுவிட்டனர். கோடரிகத்தி பொல்லுக் கொண்டு வந்தனர்.

"கொள்ளையை தடுக்க பொலிசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை ஜீப்பில் துவக்குடன் அங்கும் இங்குமாக சுற்றிக்கொண்டிருந்தனர். பொலிஸ் நிலையத்திலும் பாதுகாப்புத் தரவில்லை. நாங்கள் 7 பேர் காட்டுக்குள் ஓடிவிட்டோம்.

### ஒரு பஸ்ஸில் 160 பேர்

"மறுநாள் கடை முதலாளிகள் ஒன்று சேர்ந்து பொலிஸ் நிலையம் வந்தோம். பஸ்ஸில் 18ம் தேதி இரவு வவனியா வந்தோம். ஒரு பஸ்ஸில் 160 பேர் வந்தோம்.

சட்: 'டபிள் டெக்கரா'? இல்லை ஒற்றைத்தட்டு.

சட்: பஸ்ஸில் சௌகரியமாக இருந்தீர்களா?- அதை ஏன் பேசுவான்; றைவர் பஸ் ஓட மறுத்துவிட்டார். பின் முஸ்லிம் ஒருவர் லொறி ஒன்று கொண்டு வந்தார். அவரை ஏற்பாடு செய்தோம். அவர் பஸ்ஸை ஓட்டிவந்தார்.

கொள்ளையர்கள், அரிசி, சீனி, தேயிலைப் பெட்டிகளை பொலிஸ் நிலையத்திற்கு முன்னுல் தூக்கிச்சென்ருர்கள். பொலிஸ் நிலைய வீதியால் தேங்காய் எண்ணை ட்ரம்மை உருட்டிச் சென்றனர். பொலிஸார் பார்த்துக்கொண்டிருந்தனர். பெண்களும் பொருட்களை எடுத்துச் சென்றனர்.

### திரும்பிச் சென்றபோது..

"நான் மாகோவிற்கு திரும்பிச் சென்றேன். என் கடை எரிந்த நிலையில் இருந்தது. உள்ளூர் இளைஞர்கள் அங்கு விளையாடிக்கொடிருந்தனர். பெரிய ஆட்டுக்கல் ஒன்று மட்டும் இருந்தது. அதை அவர்களால் தூக்கமுடியாது.

"சிங்கள முதலாளியிடம் போய், கடையைத் தரும்படி கேட்டேன். தமிழனுக்குக் கடையைத் தரமாட்டேன், என்ருர். பிறகும் இப்படி நடக்கலாம் என்று பயந்து தரமறுத்தார்.

### வீடும் இல்லை

"அவரிடம் ஒரு காணி வாங்கி வீடு ஒன்று கட்டியிருந்தேன். நான் திரும்பவும் மாகோ போனபோது அவரின் மகன் அவ்வீட்டில் குடியேறியிருந்தார். "உனக்கு வீடில்லை போ" என்ருர். நான் சரைச்சல்பட விரும்பவில்லை. அதனுல் வந்துவிட்டேன். எனக்கு எல்லாம் 47,000 ரூபா நஷ்டம்."

"ஹொறவப்பொத்தானையில்

## பொலிஸார் பார்த்துநிற்க தாக்குதல் நடந்தது!"

(யாழ்ப்பாணம்)

ஹொறவபொத்தானையைச் சேர்ந்த வியாபாரி கந்தப்பா விஜிெத்தம்பி கூறியதாவது:

"அனுராதபுரத்திற்கும், திருகோணமலைக்குமிடையில் என் கடை இருக்கிறது ஹொறவம் பொத்தானையில் பொலிஸ் நிலையமும் இருக்கிறது அனுராதபுரத்திலிருந்து 32 மைலில் எனக்கு கடைஒன்றிருக்கிறது அங்கு 4கடைகள் உண்டு.

"அனுராதபுரத்தில் கலவரம் ஆரம்பித்துவிட்ட தாகச் சொன்னர்கள். கடையை பூட்டும்படி சொன்னர்கள் எனக்குப்பாதுகாப்பு அளிப்பதாகவும் சொன்னர்கள் பின்நேரம் கடைக்குள்ளிருந்தேன். சத்தம் கேட்டது. கதவின் இடுக்கினுல் பார்த்தேன் தமிழர் வந்த வான் ஒன்றை குண்டர்கள் தாக்கிக்கொண்டிருந்தனர். பொலிஸார் துவக்குடன் நின்றனர். அவர்கள் பார்த்துக்கொண்டு நின்றனர் அப்போது மோட்டார் சைக்கிளில் இன்ஸ்பெக்டர் வந்து வானில் உள்ளவர்களைச் கூட்டிச்சென்ருர். அந்த இன்ஸ்பெக்டர் அனுராதபுரத்தைச் சேர்ந்தவரல்ல சாமான்களையும் கொண்டு வேறு இடத்திற்கு போக சொல்லிவிட்டார் எந்தப்பொலிஸை சேர்ந்தவர் என்று தெரியாது.

"சந்திரசேகரின் கடை உடைத்த சத்தம் கேட்டது. பொருட்களை க்கொண்டு போனர்கள் அவர்கள் ஆயுதங்களும் வைத்திருந்தனர் என் கடையைச் சிலர் அடித்தார்கள் நான் பின்கதவால் போய் விட்டேன். உள்ளூர் இளைஞர்களும் சேர்ந்து கொள்ளையடித்தனர்!

கொள்ளையடித்த சாமான்களை, வண்டில்களிலும், டிரக்டர்களிலும், கார்களிலும் ஏற்றிச்சென்றனர். பொலிஸார் பார்த்துக்கொண்டு நின்றனர். இதனுல் பொலிஸ் நிலையம் போகப்பயமாக இருந்தது. பின் பஸ்ஸில் திருகோணமலைக்குச் சென்றுவிட்டேன். வழியில் ஒரு குழப்பமும் நடக்கவில்லை.

"முஸ்லிம் கடைக்கு ஒன்றும் நடக்கவில்லை. தமிழர்களின் கடைகள் தான் தாக்கப்பட்டன. எனக்கு பத்தாயிரம்ரூபா அந்த ஊரில் வருமதிக் கணக்காக இருந்தது. எனக்கு 15,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

# "தமிழனு என்று கேட்டு குண்டர்கள் தாக்கினர்"

(யாழ்ப்பாணம்)

ஹுறட்டகஸ்கல உதவி போஸ்மாஸ்டர் ஆறுமுகம் முருகேசு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

'அனுராதபுரத்திலிருந்து 2 மைல்களுக்கு அப்பாலுள்ள தபால்நிலயத்தில் கடமையாற்றினேன். ஆகஸ்ட் 17ந் திகதி 1-30 மணிக்கு தந்தோர் ஊழியர்வந்து 150 பேர்லொறியில் மிரக்குளம் கலனியிலிருந்து வருவதாகச் சொன்னர். அப்போது தபால்தந்தோர் அதிபர் விடுதியில் இருந்தார் தந்தி ஊழியரிடம் முன்கதவைப் பூட்டிவிடும்படி சொன்னேன். அவர் கதவைப் பூட்டும்போது குண்டர்கள் வந்து இடித்துத் திறந்தார்கள். அந்த சிங்கள ஊழியரைத் தள்ளி "இதில் நீ தலையிடவேண்டாம்' என்றனர். நான் தபால் அதிபரின் விட்டுக்கு ஓடிவிட்டேன். பின் கதவால் ஓடினன்.

'சிங்கள ஊழியர்கள் தலையிட்டு தடுக்கப்பார்த்தனர். 'நாங்களும் தமிழர்கள் தான் என்றனர். ஆனுல் குண்டர்கள் அவர்கள் சிங்களவர்கள் என்பதை அறிந்துகொண்டனர்.

### தமிழனு என்று கேட்டு அடித்தனர்

'குண்டர்கள் என்னிடம் 'தமிழனு' என்று கேட்டனர். நான் பதில்சொல்லவில்லை. ஏனெனில் அங்கு உள்ளூர் சிங்களவர்களும் நின்றுவேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அடிக்கவில்லை. குண்டர்கள் அடித்தனர். நான் விழுந்துவிட்டேன். காயம் ஏற்பட்டது இரத்தம் சேட்டில் வழிந்தோடியது. மெதுவாக எழும்பினேன், என்ன எழும்புகிருயா? என்று கூறி அடித்தனர், நான் மீண்டும் விழுந்து விட்டேன். உள்ளூர் சிங்களவர்கள் பார்த்துச்சிரித்துக் கொண்டிருந்தனர்.

### கும்பிட்டேன் அடித்தனர்!

'கும்பிடுகிறேன் தாக்க வேண்டாம்' என்றேன் "உங்கள் தமிழர்கள் எங்கள் சிங்கள மாணவிகளைத் தாக்கிவிட்டார்கள் கும்பிடவேண்டாம்' என்றனர் மற்றத் தமிழர்களுக்கும் அடித்தனர்

பொலிசார் அப்போதுவந்துவிட்டனர் குண்டர்கள் ஓடிவிட்டனர்

வைத்திய அதிகாரி ஒரு சிங்களவர். நான் ஆஸ்பத்திரிக்கு வருவதாக சொன்னேன். அவர் வரவேண்டாம், தான் தபால் நிலயத்திற்கு வருவதாக கூறினர். அவர் தபால் நிலயம் வந்து சிகிச்சையளித்தார்.

எல்லாச் சிங்களவர்களும் கெட்டவர்களல்ல நானும் சிங்களவன்தான் என்று கூறி என்னைப்பார்த்துப் பரிதாபப்பட்டார் நான் தபால் மா அதிபருக்கு அறிவித்து அன்று தபால் கந்தோரைப் பூட்டிவிட்டேன். பொலிஸ்நிலயத்திற்குச் சென்று அங்கிருந்து அனுராதபுரம் சென்று பின் யாழ்ப்பாணம் போனேன்.

"அங்கு 2 தமிழ்க்கடைகள் கொளுத்தப்பட்டன. என் சக ஊழியரின் மனைவி குண்டர்கள் வந்தபோது கைக்குழந்தையுடனிருந்தார். உடனேபின் பக்கவேலியால் பாய்ந்துபோக முடியாமல் போய்விட்டது. அதனுல் வேலிக்கு மேலால் குழந்தையை எறிந்துவிட்டு வேலியால் ஏறிப் பாய்ந்து சென்றபின் தபால் நிலயத்திற்கு வந்தார்".

# "சிங்களகாடையர்கள்மட்டும் பிரயாணம் செய்த ரயில்!"

## மாகோ ரயில் நிலைய அதிபர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

மாகோ புகையிரத நிலைய அதிபர் ஆறுமுகம் கந்தசாமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "ஆகஸ்ட் 16ம் தேதி நான் மாகோ புகையிரத நிலையத்திலிருந்தேன். காலையில் யாழ்ப்பாண ரயில் வந்தது. வழக்கமாக அதிகாலை 3 மணிக்குவரும் அன்று காலை 6-30 மணிக்கு வந்தது.

### ரயிலில் தமிழர் இல்லை

ரயிலில் சிங்கள காடையர்கள் இருந்தனர். தமிழர் ஒருவரும் இருக்கவில்லை. தமிழரைக் கொல்லவேண்டும் எனக் கத்தினர்கள், நான் பயப்பட்டேன். ரயில் புறப்பட்டுச் சென்றது. பின் தலைமன்னார் ரயில் வந்தது. அதில் மடு யாத்திரிகர்கள் வந்தனர்.

"அனுராதபுரம் ரயில் நிலையத்தில் அன்றிரவு தலைமன்னார் ரயிலும் தாக்கப்பட்டது.

"ஒரு சூட்கேசை வைத்து இருவர் பிரச்சினைபட்டுக்கொண்டிருந்தனர் நான் அப்பிரச்சினையைத் தீர்த்துவைத்தபின் அவர்களை அனுப்பினேன்.

"நான் என் அறைக்குச் சென்றேன். பின் ரயில் நிலையத்திற்கு வந்தேன் அன்று முழுநாளும் அங்கிருந்தேன். இரவு 7 மணிக்கு சிங்களவர் வீடொன்றில் போய் பாதுகாப்பாக இருந்தேன் மறுநாள் பொலிஸ் நிலையம் சென்றேன் பின் வவுனியா வந்தேன் ஒரு பஸ்ஸில் 160 பேர் வந்தோம்.

"மாகோவில் கடமைசெய்ய முடியாததினால் இடமாற்றம் பெற்றேன்" (க)

# "வெளியூரிலிருந்து குண்டர்கள் வந்தனர்"

## உள்ளூர் வாசிகள் பொருட்களை எடுத்தனர்

(யாழ்ப்பாணம்)

நொச்சியாகமவை சேர்ந்த கடை உரிமையாளர் தம்பிப்பிள்ளை ஆறுமுகம் கூறியதாவது: "நொச்சியாகமவில் தமிழருக்கு 7 கடைகள் உண்டு. ஆகஸ்ட் 18-ம் திகதி கடைகள் தாக்கப்பட்டது. எல்லாமாக 70,000 ரூபா சாமான்கள் கடையில் இருந்தது. தமிழர் கடைகள் எல்லாம் எரிந்தது. 2 தமிழர் வீடுகளும் எரிக்கப்பட்டது. வீடுகளை குண்டர்கள் மலகூடமாகப் பாவித்திருந்தனர். வெளியூரிலிருந்து 150 பேர் வந்து கடைகளை உடைத்தனர். உள்ளூர் வாசிகள் சாமான்களை எடுத்து சென்றனர் கடையைப் பூட்டி விட்டு சிங்கள கடைக்கு ஓடி பின்பு காட்டுக்குள் ஓடிவிட்டேன்.

கமிஷனர்: பொலிஸார் என்ன செய்தார்கள்?-கடமை செய்யவில்லை.

கமிஷனர்: ஒன்றும் செய்யவில்லையா?-சும்மா நின்றனர்

### பகிரங்கமாகவே தீயிட்டனர்

நொச்சியாகமவை சேர்ந்த மில்தொழிலாளி சண்முகம் பொன்னம்பலம் கூறியதாவது: குண்டர்கள் கடைக்குள் வந்து தமிழர்களை கொல்ல வேண்டும் என்றார்கள். ஒருவர் எனக்கு அடித்தார் தலையிலும் முதுகிலும் அடித்தார். விழுந்துவிட்டேன் பின் அதிகம்பேர் வந்தனர் எழுந்து ஓடிவிட்டேன்

மில்லுக்கு நெருப்பு வைத்தார்கள் சாமான்களை கொண்டு சென்றனர் காட்டுக்கு போனேன் பின்னால் சிலர் வந்தனர்.

மாலை 6 மணிக்கு எனக்கு தெரிந்த ஒரு சிங்களவர் போனார் அவரைக் கூப்பிட்டு நடந்தவற்றைச் சொன்னேன். அவர் கூட்டிச் சென்று பாதுகாப்பு அளித்தார். மறுநாள் பொலிஸ் நிலையத்திற்கு போய் ஜீப்பில் வந்து கூட்டிச் சென்றார். அங்கிருந்து அனுராதபுரம் கச்சேரிக்குச் சென்றேன்.

தமிழர்கள் கடைகள் உடைக்கப்பட்ட போது, பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை, மில் எரியும் போது 2 பொலிஸார் துவக்குடன் நின்றனர். கடைகள் காலை 10 மணிக்கு எரிய ஆரம்பித்து 3 மணிவரை எரிந்தது. பகிரங்கமாகவே தீயிட்டனர். அப்பகுதி மக்கள் பார்த்துக் கொண்டு நின்றனர்.

# தமிழ்பேசத் தெரியாத வடிவேலு கதிரவேலு

## சிங்களத்தில் சாட்சியமளித்தார்!

(யாழ்ப்பாணம்)

வவனிக்குளத்தைச் சேர்ந்த வடிவேலு கதிரவேலு சாட்சியமளிக்கையில் கூறியதாவது

"எனக்குத் தமிழ் தெரியாது; சிங்களத்தில் சாட்சியமளிக்க விரும்புகிறேன்."

கமிஷனர்: என்ன சிங்களவரா?-இல்லை தமிழர்.

சட். சண்முகலிங்கம்: பெயரைத் தவிர மற்றதெல்லாம் சிங்களம்?-ஆம். தற்பொழுது வவனிக்குளத்தில்இருக்கிறேன் குருநாகல் மாவட்டத்திலுள்ள கிரியாவர என்ற கிராமத்தில் இருந்தோம். எங்கள் குடும்பத்தில் 34பேர் உள்ளனர், எனது பெற்றோர் தமிழர். 1920ம் ஆண்டு என் தகப்பனார் அங்கு இருந்தார்; அந்தக் கிராமத்தில்தான் பிறந்துவளர்ந்தேன்;

### பெற்றோர் தமிழர்

கமிஷனர்: தந்தை சிங்களவரா, தமிழரா?-தமிழர்.

கமிஷனர்: தாயார்?-அவரும் தமிழ்ப்பெண். மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழ்ப் பாடசாலை அங்கில்லை; இதனால் நாங்கள் சிங்களப் பாடசாலையில் படித்தோம். அம்மாவுக்குத் தமிழ் தெரியும். என்னுடன் தமிழில் கதைப்பார். எனக்கு வவனிக்குளம் வந்த பின் கொஞ்சம் தமிழ்வரும். சகோதரர்களுக்குத் தமிழ் கொஞ்சமும் தெரியாது. அவர்களும் சிங்களம் படித்தார்கள்

"அங்கு முன்பு ஒரு கலவரமும் நடக்காததால், அப்போதும் ஒன்றும் நடக்காதென்று இருந்தோம்.

"6-30 மணிக்கு ஒரு கோஷ்டியினர் வந்தனர். அவர்கள் வெளியூர் கலனியைச் சேர்ந்தவர்கள். நாங்கள் பயத்தினால் காட்டுக்குள் ஓடினேம். நான் வேலியில் நின்று பார்த்த போது அடித்தனர். நானும் காட்டுக்குள் ஓடினேன்.

### 4 நாட்கள் பட்டினி

"4 நாட்கள் சாப்பாடு எதுவும் இன்றி நடுக்காட்டில் அலைந்தோம். பின் ஒருவரிடம் பொலிசுக்கு அறிவிக்கும்படி சொன்னேம். பொலிஸ் வந்து கூட்டிச் சென்றனர்.

"பொலிஸில் யாழ்ப்பாணம் போகப்போகிறீர்களா? என்று கேட்டனர். நாங்கள், யாழ்ப்பாணத்தை முன்பின் தெரியாது; உறவினர்கள் அங்கு இல்லை என்றோம். யாழ்ப்பாணத்திற்குப் போய், தமிழருடன் சேர்ந்து பொலிசாரைத் தாக்கப்போகிறீர்களா? என்று பொலிசார் சொல்லி, கிரிபாவில் இருக்கும்படி சொன்னார்கள். ஒரு மாதம் வரை அங்கிருந்தோம்.

"கொள்ளைச் சாமான்களுடன் சில குண்டர்கள் பிடிபட்டனர். பின் அவர்கள் பிணையில் விடுதலைசெய்யப்பட்டனர்; அவர்கள் எங்களை வந்து பயமுறுத்தினர்கள். இந்த முறை தப்பிவிட்டீர்கள் அடுத்த தடவை உயிருடன் இருக்கமாட்டீர்கள் என்றனர்

### பரம்பரைத்தமிழர் என்பதால்...

நான் கடந்த தேர்தலில் யு.என்.பி.யை ஆதரித்தேன். எம்.பி. லொக்கு பண்டா வந்து உதவிசெய்வதாக உறுதியளித்தார். கமிஷன் நியமிக்கப்படுமென்றார். எனக்கு உதவிப் பணமாக 200 ரூபா கிடைத்தது.

"கிரிபாவில் இருந்த போது பிணையில் வந்திருந்தவர்கள் பயமுறுத்திக்கொண்டிருந்தனர்.

கமிஷனர்: நீர் சிங்களத்தில் பேசவில்லையா?-சிங்களம் பேசினாலும் பரம்பரை பரம்பரையாகத் நாங்கள் தமிழர்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்.

"பின்னர் வவனிக்குளத்திற்குப் போனேம். அங்கு முதலில் தபால் ஊழியர் எனக்குத் தமிழ் பேசத் தெரியாதென்பதை நம்பவில்லை. நான் சிங்களத்தில்தான் அவருடன் பேசினேன். எங்கள் குடும்பத்தில் உள்ள 34 பேரும் சிங்களவர்களைக் கலப்புத் திருமணம் செய்யவில்லை. எல்லோரும் வவனிக்குளத்திற்கு வந்து விவசாயம் செய்கிறோம்." (க)

# கைம்பெண்கூறும் ஒரு சோகக் கதை!

(யாழ்ப்பாணம்)

"என் கணவர் எங்களை விட்டுப் பிரிந்து 5 நாட்களாக எவரும் அறிவிக்கவில்லை. என் மகளைப் பறிகொடுத்து, 8 மாதத்திற்குள் என் கணவரையும் பறிகொடுத்துவிட்டேன் ஐயா..."

பருத்தித்துறையைச் சேர்ந்த ஆசிரியையான சின்னத்தம்பி கைம்பெண் சிவகாமிப்பிள்ளை, அழுதபடி சாட்சியமளித்த போது மேற்கண்டவாறு கூறினர்.

### கல்வி இலாகாவில் கடமையாற்றியவர்

"சிவகாமிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது! "என் கணவர் அனுராதபுரத்தில் கல்வி இலாகாவில் கடமையாற்றினர் அவர் 26 வருடம் வேலை பார்த்தார். ஆகஸ்ட் 21ம் தேதி அவரது மரணம்பற்றிய தகவல் கிடைத்தது நான் பலரிடம் விசாரித்துப்பார்த்தேன். கல்வி இலாகா பிரதம லிகிதர் வீட்டில் என் கணவர் பாதுகாப்பாக இருப்பதாகக் கூறினர்கள், எனக்கு 5 நாட்களாக ஒருதரும் அறிவிக்கவில்லை.

### 27 ம் திகதி வந்த மரணச் செய்தி

"அவருடன் வேலை செய்த எல்லோரும் வந்துவிட்டனர். பருத்தித்துறைப் பொலிசாரிடம் போய்க் கேட்டேன். 27ம் தேதி பிற்பகல் 5 மணிக்குத்தான் என் கணவரின் மரணச் செய்தி கிடைத்தது.

"சின்னத்தம்பியின் சடலம் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் இருப்பதாகச் சொன்னர்கள். அவரின் சடலத்தை கொண்டு வர லயன்ஸ்கழகத் தலைவர், வட்டு வளாகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கணேசலிங்கம், மற்றும் சிலர் நடவடிக்கை எடுத்தனர். என் பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும், என்னை போகவேண்டாமென ஆலோசனை கூறினர்கள், யாழ் எம்.பி. சடலத்தை கொண்டு வர போதிய உதவியைச் செய்தார். பொலிஸ் பாதுகாப்பு தருவதாக வாக்குறுதியளித்தார்.

"அனுராதபுரம் புதிய நகரம் மேல்மாடி வீடொன்றில் என் கணவர் இருந்தார் என் கணவன் வந்துவிட்டாரா என்று வந்தவர்கள் கேட்டனர். என் கணவனின் ரேடியோ, சங்கிலி, மோதிரம், மற்றும் பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டன. 5000 ரூபா பணம் வைத்திருந்தார். எல்லாமாக 8,500 ரூபா நஷ்டம்.

### மகள் இறந்து இப்போது...

"அவர் உயிருடன் இருந்திருந்தால் இன்னும் 10 வருடம் கடமையாற்றியிருப்பார். 60,000 ரூபாவரை கிடைத்திருக்கும்.

"என் மகள் ஒருவர் ஜி.சி.ஈ. உயர்தரம் படிக்கும்போது 76 டிசம்பரில் இறந்துவிட்டார். 8 மாதத்திற்குள் கணவனும் போய்விட்டார், இன்னும் 3 பிள்ளைகள் இருக்கிறார்கள். மகளுக்கு வயது 19. கடைசிப் பிள்ளைக்கு வயது 5. என் சீவியத்திற்கு என் சம்பளம்மட்டுமே உண்டு."

---

வைத்திய விசாரணை

## அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் மாற்றம்

### கமிஷன் உத்தரவுமீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சன்சோனி கமிஷனின் உத்தரவைத் தொடர்ந்து, அனுராதபுரத்தில் நடைபெறவிருந்த 'மெடிக்கல் போர்ட்' விசாரணையை யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

அனுராதபுரம் சுகாதாரசேவை அத்தியட்சகர் கந்தோரில் கடமையாற்றி திரு. அப்பர், ஆகஸ்ட் கலவரத்தில் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இளைப்பாறுவதற்கு விண்ணப்பித்திருந்தார். அவரை அனுராதபுரத்தில் நடக்கும், 'மெடிக்கல்போர்ட்' விசாரணைக்கு செல்லுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. 'மெடிக்கல் போர்ட்டை' யாழ்ப்பாணத்தில் வைக்குமாறு இவர் கேட்டும் மறுக்கப்பட்டது.

திரு. அப்பர், சன்சோனிக் கமிஷன்முன், புகார் செய்ததைத் தொடர்ந்து கமிஷன் தலைவர் திரு. எம். சி. சன்சோனி, 'மெடிக்கல் போர்ட்' விசாரணையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு அனுராதபுரம் சுகாதாரசேவை அத்தியட்சகருக்கு கட்டளையிட்டிருந்தார்.

இதுபோது, யாழ்ப்பாணத்தில் நடக்கும் என்று கமிஷனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் அனுராதபுரம், புகையிரத நிலையத்தில் கடமையாற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எஸ். தாமோதரம், ரயில் கார்ட் திரு. தோமாஸ் ஆகியோரும் சன்சோனிக் கமிஷனிடம் புகார் செய்ததைத் தொடர்ந்து அவர்கள் மீதான 'மெடிக்கல் போர்ட்' விசாரணையையும் யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு கமிஷனர் புகையிரத இலாகாவிற்கும் கட்டளையிடப்பட்டது. இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

---

### யாழ்ப்பாணத்—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

போக பொலிசார் 'உள்ளே போகவேண்டாம்' எனத் தடுத்தனர்.

பஸ்நிலையத்தில் நின்ற காடையர்கள் சண்டிக்கட்டுக் கட்டிக்கொண்டுவந்து எங்களை ஒரு பார்வைபார்த்தனர். இங்கும் கலவரம் நடக்கப்போகிறது ஏதாவது ஒழுங்குசெய்யுங்கள் என்று மற்றவர்களிடம் கூறினேன்.

### எஸ்,பி. சண்முகம் வந்தார்

பொலிஸ் அதிபர் சண்முகம் வந்தார். பிள்ளையார் கோவிலில் எங்களை தங்க ஏற்பாடு செய்தார்.

### எம். பி.யின் துண்டு

கலவெல பொலிஸ் நிலையத்தில் கொள்ளைச் சாமான்களுடன் சிலகுண்டர்களைப்பிடித்து வைத்திருந்தனர். என்னுடனிருந்த சுப்பிரமணியம் என்றவர் அங்கு பின் போயிருந்தார். கலவெல எம்.பி ஏக்கநாயக 'அவர்கள் என்னுடைய ஆட்கள் விட்டுவிடுங்கள்' என்று துண்டு எழுதி அனுப்பியிருந்தார்; பொலிசார் அவர்களை விட்டுவிட்டனர்.

கமிஷனர்: உமக்கு எப்படித் தெரியும்? - சுப்பிரமணியம் வந்து சொன்னார் எனக்கு 25,000 ரூபா நஷ்டம். அகதிகளில் பல இந்தியர்களும் வந்திருந்தனர். அவர்களும் அடிவிழுந்ததாகச் சொன்னார்கள்.

தம்புள்ள இன்ஜினியர், வைத்திலிங்கம் சதானந்தன் நேற்று கமிஷன்முன் ரகசியமாக சாட்சியமளித்தார். (க)

# "யாழ். வளாக சிங்கள மாணவருக்கு பஸ்களைவிட இ. போ. ச. யாழ். அத்தியட்சகர் மறுத்தார்!

## பொலிஸ், இராணுவத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பச்சைப் பொய்!"

### சட்டத்தரணி சொய்சா தொகுப்புரை

(யாழ்ப்பாணம்)

"கமிஷன்முன் சாட்சியமளித்த இலங்கைப் போக்குவரத்துச்சபை யாழ்ப்பாண அத்தியட்சகர்; யாழ் வளாக சிங்கள மாணவர்களை அனுராதபுரம் கொண்டு செல்ல யாழ். நகரிலிருந்து பஸ்களை விடமறுத்தார்"

சன்சோனி கமிஷன்முன் பாதுகாப்பு படைகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஏ. இ. டி. சொய்சா தொகுப்புரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினர்.

சட்டத்தரணி சொய்சாவின் தொகுப்புரையின் ஒரு பகுதி நேற்றைய 'ஈழநாடு'வில் வெளிவந்ததுவாசகர்கள் தெரிந்ததே.

#### கச்சேரி மாநாடு

சட்டத்தரணி சொய்சா தொகுப்புரையில் மேலும் கூறியதாவது: "யாழ்ப்பாணத்தில் சிங்கள மாணவர்கள் தாக்கப்பட்டால், தென்பகுதியில் உள்ள அத்தனை தமிழர்களும் கொல்லப்படுவார்களென்று டி. ஐ. ஜி. அனு செனிவரத்தின கூறியதாக இ. போ. ச. அத்தியட்சகர் இங்கு சாட்சியமளிக்கையில் கூறினர். அவர்தான் சிங்கள மாணவருக்கு பஸ்களைவிடமறுத்தார். அந்த இ. போ. ச. அத்தியட்சகரின் பேச்சு, வகுப்புவாதத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்ததை கவனித்த டி. ஐ. ஜி. அனு செனிவரத்னவகுப்புவாதத்தை இங்கு கிளப்புவது நல்லதல்ல; அதுபற்றி எமக்கு எவ்வித அக்கறையும் கிடையாது என்று கச்சேரியில் நடந்த மாநாட்டில் கூறினர். ஆனல் டி. ஐ. ஜி. வகுப்புவாதத்தை கிளப்பிவிடக்கூடியதாக பேசியதாக இ. போ. ச. அத்தியட்சகர் சாட்சியமளித்திருக்கிருர். இக்கமிஷன் முன்னிலையில் எந்த விதத்தில் பொய் சாட்சியங்கள் தரப்பட்டிருக்கிற தென்பதற்கு அது ஒரு உதாரணமாகும். கமிஷன்முன் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் போதியளவு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதால், டி. ஐ. ஜி. அனு செனிவரத்தினவின் பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதென் பதை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

#### சாட்சியங்கள் அனைத்தும் பொய்

நான் கூறுவது என்னவென்ருல், டி. ஐ. ஜி. செனிவரத்தினவிற்கு எதிராக 3 குற்றச்சாட்டுகள் இங்குள்ள சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. அத்தனையும் அப்பட்டமான பொய் என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்.

"பாதுகாப்புப்படையினரான இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் எதிராக இங்கு அளிக்கப்பட்ட சாட்சியங்களில்உள்ள குற்றச்சாட்டுகள், அத்தனையையும் நான் மறுக்கிறேன். அவையாவும் பச்சைப் பொய். உயர் பொலிஸ் இராணுவஅதிகாரிகளின் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தும் விதத்தில், திட்டமிட்டு அளிக்கப்பட்ட சாட்சியங்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். பொலிஸ்இராணுவத்தினருக்கு எதிரான அத்தனை சாட்சியங்களில் உள்ள குற்றச்சாட்டுகளை மறுக்கிறேன். திட்டமிட்டு பொலிஸாரின் பெயரை கெடுப்பதற்காகவே இப்படி சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

"நாட்டின் இந்தப் பகுதியில், பொலிஸாரும் இராணுவத்தினரும், ஆக்கிரமிப்புப் படைகள் என்று கூறப்படுகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக்கு எதிராகவே பொலிஸார் இயங்கி வந்துள்ளனர். அதனுல் தான் பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் எதிராக பொய்ச் சாட்சியங்கள், இக்கமிஷன் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன." (க)

---

கலவரத்தில் பலியான

# ரயில் நிலைய அதிபரின் மைத்துனர் சாட்சியம்

சட்டத்தரணி-அப்பாபிள்ளை நடராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது: 'கலவரத்தில் பலியான அனுராதபுரம் ரயில்நிலைய அதிபர் சதாசிவம் என் மைத்துனர்.

"அவரது மனைவி நஷ்டஈடு கேட்டிருக்கிருர். 19ந் தேதி காலை அவர் மரணம் பற்றி அறிந்தேன். கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையின் உதவியால் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குத் தொடர்புகொண்டு என் மைத்துனர் பற்றி விசாரித்தேன். அனுராதபுரம் போகமுடியாமல் இருந்தது. ஆஸ்பத்திரியில் எதுவும் சொல்லிக்கொள்ள முடியாதநிலையில் இருந்தனர். பின், பொலிசார் மரணம் பற்றித் தெரிவித்தனர். பொலிசார் சந்தேகத்தில் ஒருவரைக் கைதுசெய்தனர்.

### குடும்பத்தினர் அயல் வீட்டில் தஞ்சம்

அனுராதபுரம் சுகாதார இலாகாவைச் சேர்ந்த குழந்தைவேலு சண்முகானந்தன் கூறியதாவது: "நான் அனுராதபுரம் சுகாதார இலாகாவில் கடமையாற்றினேன். ஆகஸ்ட் 14ந் தேதி நான் வெளியூர் சென்றுவிட்டேன். ஆகஸ்ட் 17ந் தேதி என் வீட்டைத் தாக்கிக் கொள்ளையடித்தனர்.

கமிஷனர்: நீர் இருக்கவில்லை? என் குடும்பத்தினர் அயலவரான ஐ பி எஸ் சில்வா வீட்டில் தஞ்சமடைந்தனர். அவர் வேண்டிய உதவிகளைச் செய்தார். எனக்கு 44,000 ரூபா நஷ்டமேற்பட்டது.

நான் எனது சம்பளம் பற்றிச் சுகாதார இலாகாவுக்குப் பல தந்திகள் அடித்தேன். கடிதம் அனுப்பினேன். பதில்லை. நான் நேரில் சென்று விசாரித்தேன். நேரமில்லை என்றும் நடவடிக்கை எடுப்பதாகவும் சொன்ஞர்கள். பின் சம்பளம் கிடைத்தது.

அனுராதபுரம் சுகாதார இலாகாவைச் சேர்ந்த லிகிதர் இல்வா கூறியதாவது: சண்முகானந்தனின் அயல் வீட்டில் வசிக்கிறேன். ஆகஸ்ட் 17ந் தேதி சண்முகானந்தன் குடும்பத்தினர் என் வீட்டிற்குவந்தனர். நான் அப்போது வீட்டில் இல்லை, நான் கந்தோரில் இருந்தேன்.

அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தேன் மறுநாள் வீட்டைவிட்டுச் சென்றனர். கச்சேரிக்குச் சென்றனர்.

அதன் பின் சிலர் வந்து, ஏ'ன் தமிழருக்கு உதவிசெய்து வைத்திருந்தாய்' என்று பேசினர். அவர்களை அடையாளம் தெரியாது. என் கந்தோரில் சுவர்ணபாலா, அல்பேட் ஆகியோர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

---

'கடை ஊழியர்மீது

# பெற்ரேல் ஊற்றி கொளுத்தினர்கள்'

(யாழ்ப்பாணம்)

'தம்புள்ளையிலுள்ள ஏ. எஸ். சங்கரப்பிள்ளை கடை ஊழியரான ரத்தினராசாமீது பெற்ரேல் ஊற்றி குண்டர்கள் தீ வைத்தார்கள். அவரது கையை அடித்து முறித்துவிட்டார்கள்; அவர் உயிர் தப்பிவிட்டார்."

தம்புள்ள ஏ. எஸ் சங்கரப்பிள்ளை கடை விற்பனையாளரான ஆர். இ. ஜெயசேன சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: ஆகஸ்ட் 77 ல் நான் ஏ. எஸ். சங்கரப்பிள்ளை கடையில் விற்பனையாளராக இருந்தேன். இக்கடை தம்புள்ள பொலிஸ் நிலையத்திலிருந்து 1 மைல் தூரத்திலுள்ளது. அங்குள்ள கடைகளில் இக்கடைதான் பெரிய கடை. இக்கடையில் புடவைக் கடை, இரும்புக் கடை, புத்தகக்கடை, இல்லறக் கடை என்று எல்லாம் புறம்பாக இருக்கிறது.

ஆகஸ்ட் 17 ம் தேதி 2 மணிக்கு எங்கள் கடைக்கு குண்டர்கள் வந்து தீ வைத்தார்கள். கடையை உடைத்துக் கொள்ளையடித்தார்கள். எங்கள் விற்பனையாளர் ரத்தினராசாவை திட்டுக் கொளுத்திஞர்கள். கையை அடித்து முறித்தார்கள், மோசமாகத் தாக்கிஞர்கள்.

பின் இராணுவ ஜீப் வந்தது. அப்போது பொலிசார் அங்கு நிற்கவில்லை. முதல் தாக்கப்பட்ட கடை எங்கள் கடைதான்.

---

## பங்கீட்டு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட அளவு விறகு மட்டுமே இக்காலைக்கு வந்துள்ளதால் கியூவில் நீண்ட நேரம் காத்திருந்த பலர் விறகின்றி ஏமாற்றத்துடன் வீடு சென்றனர்.

சங்கானை விறகுசாலைக்குச் சென்ற பல பொதுமக்களும் நீண்டநேரம் காத்திருந்து விறகுமுடிந்தபின் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இவ்விவகாரம் குறித்து வட்டுக்கோட்டைத் தொகுதி எம் பிக்கும்மரக்கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கும் புகார்செய்யப்பட்டுள்ளது. (இ)

---

# 'மோதிரத்துக்காக விரலை குண்டர்கள் வெட்டினர்கள்'

(யாழ்ப்பாணம்)

"தமிழர் ஒருவரின் விரலில் இருந்தமோதிரத்தை கழட்ட முடியாமல் போகவே, குண்டர்கள் அவரது விரலை வெட்டி மோதிரத்தை எடுத்தார்கள்"

அனுராதபுரத்தைச் சேர்ந்த வல்லிபுரம் கம்பெனி" மனேஜர் கந்தசாமி முருகையா, சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியமளிக்கையில்மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: "அனுராதபுரத்தில் எங்கள் கடைதான் பெரியகடை, ஆகஸ்ட் 17ம் தேதி குழப்பம் நடப்பதாக அறிந்தேன்.

#### பொலிசார் வந்தனர்

"என் மாமா அரசாங்க அதிபருக்குப் போன்பண்ணினுர். உதவிசெய்வதற்குப் போதிய ஆட்கள் இல்லையென்று அவர் கூறினுர். பின் மாமா பொலிஸ்நிலையத்திற்கு போன்பண்ணினுர். ஜீப்பில் பொலிசார் வந்து மாமாவையும் மற்றவர்களையும் ஏற்றிச் சென்றனர். கொள்ளை நடந்து கொண்டிருந்தது. 3 இராணுவத்தினரை அங்கு இறக்கிவிட்டுச் சென்றனர். ஜீப் சென்றதும், அவர்களும் சென்றுவிட்டனர். நான் கடைக்குள் இருந்தேன். பின்னர் பின்பக்கத்தாலே ஓடினேம். பெருந்திரளானவர்கள் ரோட்டில் நின்றனர். என் மோதிரத்தை பறித்தார்கள். நான் மயங்கிவிட்டேன். பின் ஜீப் வந்தது. அதில் ஏறிச் சென்றேன். மறுநாள் பொலிசாருடன் கடைக்கு வந்தேன். ஒரு இரும்புப்பெட்டி உடைக்கப்பட்டிருந்தது. மற்றது அரைகுறையாக உடைக்கப்பட்டிருந்தது. பின் ஒரு இரும்புப் பெட்டியை வவுனியாவிற்கு கொண்டுவந்து பலர் முன்னிலையில் திறந்துபார்த்தோம். எனக்கு 12,65,000 ரூபா நஷ்டம் (க)

---


## யாழ். ரேட்டரி நடத்தும் சிறந்த நடத்துநர் தெரிவு கூப்பன்

நடத்துநரின் பெயர் ........................................

பதிவு இலக்கம் ........................................

அனுப்புபவரின் பெயர் ........................................

அனுப்புபவரின் விலாசம் ........................................

திகதி ........................................

ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்தி செய்து டாக்டர் பா. சோ. பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (இ)


---

"நான் இயற்றிய பாடலை

# பாடிக்கொண்டே வீட்டை உடைத்தனர்!"

(யாழ்ப்பாணம்)

"கடந்த தேர்தலில் நான் யூ. என். பி. மேடைகளில் தோன்றி, சுதந்திரக் கட்சியைத் தாக்கி, நானே இயற்றிய பாடலொன்றைப் பாடினேன். ஆகஸ்ட் கலவரத்தின்போது, குண்டர்கள் அந்தப் பாட்டை இசைத்துக்கொண்டே எனது வீட்டை உடைத்தனர்."

கல்கமுவாவைச் சேர்ந்த கடை உரிமையாளரான திரு. நாச்சிமுத்து உலகநாதன் நேற்று சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: "கல்கமுவ எம். பி. திரு லொக்குபண்டாரவைச் சந்தித்து, தேர்தலில் உங்கள் வெற்றிக்கு உழைத்தேனே என்னைக் காப்பாற்றுங்கள் என்றேன். வந்து உதவி செய்வதாக உறுதியளித்தார். ஆனல் அந்தப் பக்கம் தலைகாட்டவே இல்லை. தமிழ்க் கடைகள் தாக்கப்பட்ட சமயமும் அவரைக் காணவில்லை."

(இவரது சாட்சியத்தின் மிகுதியும் சன்சோனி கமிஷன்முன் நேற்று சாட்சியமளித்த சின்னையா இராமச்சந்திரன், வேலுப்பிள்ளை சிறிதரன், சின்னத்தங்கம் ராசரத்தினம், இளையதம்பி கந்தசாமி, பொன்னுசாமி நாடார் அன்றாஸ், கந்தசாமி முருகையா, சின்னத்துரை சிவஞானமூர்த்தி, குணவர்த்தனம், சுந்தரேஸ்வரன், தம்பிஐயா பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சாட்சியங்களும் வேறுபக்கத்தில் பார்க்க.)

3-வது வாரம்
பூலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45.
சனி. ஞாயிறு 2-30
ரஜனிகாந்த் -ஸ்ரீதேவி
மூன்று முடிச்சு

வெல்லி
(சாவகச்சேரி)
இன்று மட்டும்
தினசரி: 6-30, 9-30
சிவாஜி—பத்மினி
தாயே உனக்காக

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடித்த
அரசகட்டளை

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்: ஜி. ஆர்:—வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

Rio Jaffna (Phone:7607)
Daily 10-30 a. m. 4-45, 7-00 and 9-45 p.m
Elizabeth, Ashley, Joe, Don, Baker, JimKelly
in
GOLDEN NEEDLES
(ஒரு பெண்ணின் ஸாட்டிச் சண்டை பிரமாதம்)
Color (Advance Booking for Families Accepted) Scope

வின்ஸா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா,
விஜயகுமார்-நிர்மலா, அசோகன் மனோரமா
நடித்த
K. R. G. பிக்ஷர்ஸ்
ஜானகி சபதம்

Regal (Jaffna) Daily 4-30, 7-00 and 9-30 p.m.
Starring Three of the World's Most Popular Actors
MICHAEL CAINE, DONALD SUTHERLAND,
ROBERT DUVALL
Daring attempt by a group of German Paratroopers to Kidnap Britain's Wartime Prime Minister, Winston Churchill
THE EAGLE HAS LANDED
(Color-War film)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7668.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
காந்தாராவ்...ராஜஸ்ரீ...எம். ஆர். ராதா...ரங்கராவ்
நாகேஷ்...மனோரமா...கள்ளபார்ட் நடராஜன்.
நாகமலை அழகி
புதிய பிரதி
நடனம் -கலர்-
மந்திரஜாலங்கள், சண்டைக்காட்சிகள் நிறைந்தது
25, 26-3-78 சனி, ஞாயிறு காலை 8-30 மட்டும்
Sea Faring DOG

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
சாவித்திரி
நடித்த
குறவஞ்சி (புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் - ஜெய்சித்திரா
நடித்த
பணக்கார பெண்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ (யாழ். நகர்)
போன் 7698
முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்

"இலங்கைத் தமிழர்கள்

# ஓரணியில் திரண்டு ஒரே இயக்கமானால் உரிமை கிடைக்கும்"

## நாஞ்சில் மனோகரன் கருத்து

சென்னை, மார்ச் 22: "இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்கள் பேதங்களை மறந்து ஓரணியில் திரண்டு ஒரே இயக்கமாக செயல் பட்டால், அவர்களின் உரிமை க்குரலுக்கு அரசு செவி சாய்க்கும், அவர்களின் உரிமைகளை அரசு வழங்கும்"

இவ்வாறு தமிழக நிதி அமைச்சர் நாஞ்சில் மனோகரன், தம்மை நேரில் சந்தித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த திரு. பொன்னையா, திரு. வி. கே. டி. பாலன் ஆகியவர்களிடம் கூறினார். மேலும், அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

"இலங்கையின் அரசியல் பிரச்னைகளில் தமிழக அரசு தலையிட முடியாது. ஆனால் இலங்கைத் தமிழர்களுக்கு இன்னல் நேரிடும் பொழுது மத்திய அரசின்மூலம் இலங்கை அரசை தட்டிக்கேட்க முடியும்.

"நாங்கள் நாட்டால்—அரசியலால் வேறுபட்டிருந்தாலும் மொழியால், பண்பாட்டால், கலாசாரத்தால் ஒன்று பட்டிருக்கிறோம். இலங்கைத் தமிழர்களை இதயபூர்வமாக நேசிக்கிறோம்.

"அமரர் அறிஞர் அண்ணா கூறியதைப்போல தமிழர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் வாழும் நாட்டுக்கே விசுவாசமாக இருக்கவேண்டும். இதைத்தான் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள்.

"நான் தந்தை செல்வாவின் இறுதி அஞ்சலியில் கலந்துகொள்வதற்காக இலங்கை வந்திருந்தபொழுது பல அரசியல் தலைவர்களைச் சந்தித்து தமிழர்களின் நல்வாழ்வுபற்றி உரையாடியுள்ளேன். தமிழ் பேசும் மக்களின் சுய உரிமைகள் கிடைக்க வேண்டும்"

இவ்வாறு நாஞ்சில் மனோகரன் கருத்துத் தெரிவித்தார். [வெள்ள. நிரு]

## உதவிசெய்து ஊக்குவித்த சிங்கள—

[2ம் பக்கத் தொடர்ச்சி]

குடிசைகள் யாவும், இந்தியத் தமிழருக்குச்சொந்தமானவை.

"19ம் திகதி குண்டர்கள் பொலிஸ் நிலையத்தை சுற்றி வளைத்து தாக்கமுற்பட்டார்கள். மாகோ ஏ. எஸ். பி. வந்தார் கண்ணீர்ப்புகை அடிக்கப்பட்டது. குண்டர்கள் கலைந்துசென்றனர். பொலிஸ் நிலையத்தைதாக்க குண்டர்கள் பல தடவை முயன்றனர். எல்லா தமிழர் வீடுகளும் உடைத்துக் கொள்ளையடிக்கப் பட்டது. நான் பிறகு அந்தம் போகவில்லை. என் வீடு ஒரு சிறிய வீடு. பின் குருநாகலுக்கும் போனேன். என்னிடம் பணமில்லை. நான் கடன் வாங்கிவந்தேன்.

### கல்கமுவ பொலிசார்

"கல்கமுவ பொலிஸ் நிலையத்தில், தமிழர்களை நன்கு கவனித்தார். "யாழ்ப்பாணத்தில் சிங்களவர்களைக் கொல்லுகிறார்கள். அப்படியிருந்தும் உங்களைக் காப்பாற்றுகிறோம்" என்று பொலிஸார் கூறினார்கள். எனக்கு 12,000 ரூபா நஷ்டம்.

### கெக்கிராவ வர்த்தகர்

கெக்கிராவ பிரபல வர்த்தகரான நாகமுத்து சிவப்பிரகாசம் கூறியதாவது: சுப்பிரமணியம் கம்பெனியின் பழைய பங்காளராக இருந்தேன். நான் தான் கடையை நடத்தினேன். அது அங்கு பெரிய கடை. என் தகப்பன் நாகமுத்துவாலும் அவரது சகோதரர் சுப்பிரமணியத்தினாலும் இக் கடை ஆரம்பிக்கப்பட்டது.

"லிவர் பிறதர்ஸ், இலேரன் ருபாக்கோகம்பெனி, எவரெடி, நெசில்ஸ் புறக்டக்ஸ் போன்றவற்றுக்கு ஏஜண்டாக இருந்தோம். எங்களுக்கு சொந்த வீடு உள்ளது.

"கெக்கராவ பொலிஸ் நிலையம் 50 யார் தூரத்தில் இருக்கிறது 58ம் ஆண்டு கலவரத்தில ஒன்றும் நடக்கவில்லை. சப்இன்ஸ்பெக்டர் குணவர்த்தன பொறுப்பதிகாரியாகஇருந்தார்.

### எம. பி. கூறியது

"அனுராதபுரத்தில் கலவரம் நடப்பதாக தகவல் கிடைத்தது.

"கெக்கராவ எம். பி. வந்து சந்தித்து "நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று கூறினார். தான் அவசரமாக கொழும்பு செல்லவிருப்பதாகவும் கூறினார்.

"அனுராதபுரத்திலிருந்து லொறியில் தமிழர் கடைகளைத்தாக்க குண்டர்கள் வந்துகொண்டிருப்பதாக பொலிஸார் சொன்னார்கள்.

### அவசரத்தில் குண்டர் பலி

வழியில் பொலிசார் 15 பேரைக் கைதுசெய்தனர். கெக்கராவ பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவந்தனர். அச்சமயம் குண்டர்கள் பொலிசாரைக் கண்ட பயத்தில் வேகமாக லொறியை ஓட்டி, அது ஒரு தந்திக்கம்பத்தில் மோத குண்டர் ஒருவர் பலியானார்.

"அன்றுமாலை, சப் இன்ஸ்பெக்டர் 15 தமிழ் உத்தியோகத்தர்களை மாஇலுப்பைக்கடவையிலிருந்து கொண்டுவந்தார். அவர்களும் என் வீட்டில் இருந்தனர். ரயிலில் வந்த தமிழ்க் குடும்பம் ஒன்றும் பொல்காவலையில் இறங்கி பஸ்ஸில் வந்து எங்கள் வீட்டிலிருந்தது. இதுவரை கெக்கராவையில் கலவரம் நடக்கவில்லை.

"நாங்கள் இரவு 1 மணி வரை காவல் காத்துவிட்டுப் போய்ப் படுத்துவிட்டோம். அதிகாலை 4 மணிக்குச் சத்தம் கேட்டது. ஒருவர் வந்து எங்களை எழுப்பி, சோமசுந்தரம் கடைக்கு தீவைத்துவிட்டார்கள் என்று சொன்னார். நான் இரும்புப் பெட்டியைத் திறந்து காசை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தேன். சப் இன்ஸ்பெக்டர் குணவர்த்தன வந்தார். என் கடைக்குமேல் 4 குண்டர்கள் ஏறியதாகவும், நான் கலைத்தபோது 3 பேர் ஓடிவிட்டதாகவும், ஒருவர் உள்ளே இறங்கிவிட்டதாகவும் கூறினார் அவரைக் கைது செய்ய பின் கதவைத் திறக்கும்படி கூறினார். நாங்கள் போய் கடையைத் திறந்தோம். உள்ளே ஒருவர் நின்றார். அவரை சப் இன்ஸ்பெக்டர் கைது செய்து கூட்டிச் சென்றார். அவர் கையில் பெற்றோல் தகரம் இருந்தது வீட்டிலிருந்தவர்களையும் பாதுகாப்புக்காக பொலிஸ் நிலையம் கூட்டிச் சென்றார்.

### கைதானவர்களை விடுவித்தனர்

இரவு 7 மணிக்குப் பின்பக்கத்தால் குண்டர்கள் வந்து நெருப்பு வைத்தார்கள். நான் காட்டுக்குள் ஓடிவிட்டேன். அங்கிருந்து பொலிசுக்குத் தகவல் அனுப்பினேன். பொலிசார் வந்து கூட்டிச் சென்றனர். முதல் நாள் கைதுசெய்த 15 பேரையும் பொலிசார் விடுதலைசெய்தனர். அனுராதபுரம் உதவிப் பொலிஸ் அதிபர் உத்தரவின்படி அவர்களை விடுதலைசெய்ததாகப் பொலிசார் கூறினர்கள்.

கமிஷனர்: சப் இன்ஸ்பெக்டர் குணவர்த்தன இப்போது எங்கே? தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கமிஷனர்: எதற்காக? வேறு வழக்கிற்காக. இரவு

(8-ம் பக்கம் பார்க்க)

## 'ஆனையிறவுக்கு அப்பால் 'தர்பார்' நடக்கிறது'

# பணவிவகாரம்:

## 14 வயது மகள் தற்கொலை!

[யாழ்ப்பாணம்]

மகளிடம் கொடுத்த பணத்தை கேட்டு தாயார், அடித்ததால் மகள் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டாள்.

கோப்பாயைச் சேர்ந்த சரஸ்வதி இளையதம்பி என்ற 14 வயது சிறுமியின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினார்.

14 தினங்களுக்கு முன் மகளிடம் 30 ரூபாவை கொடுத்த தாய், சந்தைக்கு சாமான் வாங்கச் செல்ல 10 ரூபா கேட்டதும், பணத்தை செலவழித்துவிட்டதாக மகள் கூறியதால், தாயார் மகளை அடித்ததாக விசாரணையில் கூறப்பட்டது.

பிற்பகல் 4 மணிக்கு தாயார் மகளை சந்தைக்குப்போக அழைத்தபோது 'வாரேன் வாரேன்' என்று கூறிவிட்டு, நச்சுத்திராவகத்தை குடித்து விட்டுத் தாயாரின் காலில் வந்து விழுந்தாராம்.

'இனிமேல் காசு கேட்க மாட்டீர்கள். நான் மருந்து குடித்துவிட்டேன்என்று கூறியபடி மயங்கி விழுந்த மகள் உடனே ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டார். ஆனால் வழியில் உயிர்பிரிந்து விட்டது.

விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

நாகம்ஸ்
(கன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
எம். ஜி. ஆர். — லதா
நடித்த
நினைத்ததை முடிப்பவன்

பொலிசார் ஆகாயத்தை நோக்கிச்சுட்டதும்

# 10 ஆயிரம்பேர் இருந்த இடத்தில் 10 பேர் கூட நிற்கவில்லை'

(7ம் பக்கத் தொடர்ச்சி)
8 மணிக்கு ஊரடங்குச் சட்டம் இருந்தது. அதன் பின் தான் கலவரம் நடந்தது. விடுதலைசெய்யப்பட்ட 15 பேர் தான் இதனைச் செய்திருக்க வேண்டும்.

## பொலிசார் மறுத்தனர்

"எனது 'மில்'லில் நின்ற 6 லொறிகள் முற்றாக எரிந்து விட்டன. இந்த லொறிகளைப் பொலிஸ்நிலையத்தில் விட மறுத்ததால் என் 'மில்'லில் கொண்டு வந்துவிட்டார்கள். 19ந் தேதி காலை 9 மணிக்கு 'மில்' தாக்கப்பட்டது. மில்லில் உள்ள தொழிலாளிகள் காட்டுக்குள் ஓடிவிட்டார்கள். லொறிச் சாரதிகளும், லொறியில் வந்தவர்களும் காட்டுக்குள் கொல்லப்பட்டார்கள்."

## பாதுகாப்புத்தர மறுத்தனர்

கெக்கராவையைச் சேர்ந்த கணக்காளர் சின்னையா இராமச்சந்திரன் கூறியதாவது: "நான் சம்பவத்தன்று அனுராதபுரத்திற்கு ஜீப்பில் சென்றேன். 3 பொலிசாரை யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் சுட்டுவிட்டதாகவும், அங்கு குழப்பம் நடப்பதாகவும் கூறினார்கள், ஜீப்பில் வந்தவர்கள், நகரத்திற்குப் போய் பார்த்துவிட்டு வந்தனர். இங்கு தாமதிக்க முடியாது உடனே கெக்கராவை போகவேண்டும் என்றேன். கலவேவா வந்தபோது 16 பொலிசாரை சுட்டுவிட்டார்கள் என்றனர். பின்னர் 14 பொலிசாரை சுட்டுவிட்டார்கள் என்றனர். பிரதான பாதையால் செல்லவேண்டாம். குறுக்குவழியால் செல்லும்படி கூறினேன். கந்தேருக்கு வந்தேன். இராணுவ அதிகாரியுடன் தொடர்புகொண்டேன். அவர் பாதுகாப்பு தரமறுத்து விட்டார், சுடுவதற்கு உத்தரவு வரவில்லை என்று கூறினார்கள். இதுபற்றி தலைமைப்பீடத்திற்கு அறிவித்தேன். பின் கெக்கராவை பொலிசாருடன் தொடர்புகொண்டேன். பொலிசார் வந்து பொலிஸ் நிலையத்திற்கு கூட்டிச் சென்றனர். சப் இன்ஸ்பெக்டர் குணவர்த்தனவும் இருந்தார். எல்லாரும் குடித்த நிலையில் இருந்தனர். அங்கு நிற்க விரும்பவில்லை. எஸ். ஐ. குணவர்த்தனவிடம் சென்றேன். அவரும் குடித்திருந்தார். என்னைப் போகும்படியும் 5 நிமிடத்தில் வருவதாகவும் கூறினார்.

கமிஷனர்: சப்-இன்ஸ்பெக்டரும் குடித்திருந்தாரா?-அவ்வளவு குடிக்கவில்லை. அங்கு நிற்கமுடியவில்லை. ஒரு தமிழ் பொலிசாரிடம் என்னை சுப்பிரமணியம்கடையில் கொண்டு போய்விடும்படி கேட்டேன்.

கமிஷனர்: அவர் குடித்திருந்தாரா?- இல்லை. நான் போனபோது சோமசுந்தரம் கடை எரிந்துகொண்டிருந்தது சப் இன்ஸ்பெக்டர் குணவர்த்தன வந்தார். எங்கள் ஆட்கள் தாக்கப்படுகிறார்கள், அப்படியிருந்தும் தமிழர்களுக்கு பாதுகாப்பளிக்கிறோம் என்றார்.

கமிஷனர்: எங்கள் ஆட்கள் என்றால்? இங்களவர்; 3 இளைஞர்கள், பொலிஸ் நிலையத்திற்கு வந்து பொலிசாருடன் கதைத்தார்கள். எஸ். ஐ. குணவர்த்தனவுடனும் கதைத்தனர். நாங்கள் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் உள்ள ரியூடோரியலுக்கு போனோம். அந்த 3 பேரும் சுப்பிரமணியம் கடைக்குச் சென்றனர். அப்போது பொலிஸ் கான்ஸ்டபிள் தனக்குத் துவக்குத்தரவில்லை என்றும், குண்டர்கள் வந்தால் ஒன்றும் செய்யமுடியாதென்றும் கூறினார். பின் நாங்கள் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றோம். அப்போது சுப்பிரமணியம் கடை கொள்ளையடிக்கப்பட்டது. சில குண்டர்கள் கொள்ளையடித்த பொருட்களுடன் பொலிஸ் நிலைய கண்டீனுக்கு வந்து சென்றனர். பொலிஸ் நிலையத்தைப் பாதுகாக்கமுடியாது இருப்பதாக குணவர்த்தன சொன்னார்;

## தர்பார்நடப்பதாக கூறினார்

அப்போது உதவி பொலிஸ் அதிபர் மெண்டிஸ் அங்குவருவதாக தகவல் கிடைத்தது: உடனே 8 பொலிசார் வெளியில்சென்று வானத்தைநோக்கி 3 தடவைகள் சுட்டனர். குண்டர்கள் கலைந்துசென்றனர். பத்தாயிரம்பேர் நின்ற இடத்தில் 10 பேரைக்கூடக் காணவில்லை. உதவி பொலிஸ் அதிபர் வந்து மற்றக்கூட்டத்தினரையும் கலைக்கும்படி உத்தரவு போட்டார். பின் அனுராதபுரம் கச்சேரிக்கு சென்றோம், கச்சேரிக்கு அனுராதபுரம் பொலிஸ் அதிபர் லியனகே வந்தார்; தான் யாழ்ப்பாணத்திற்கு சென்று வந்ததாகவும் ஆனையிறவுக்கு அப்பால் தனி ஒருவர் தர்பார் நடப்பதாகவும் கூறினார்."

## காட்டில்வைத்து கொன்றனர்

மானிப்பாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிறிதரன் கூறியதாவது: "ஆகஸ்ட் 17ம் தேதி கெக்கராவைக்குச் சென்ற லொறியில் கிளீனராகச்சென்றேன். லொறியில் கந்தசாமி கிருபாகரனும், சாரதியும் வந்தார்கள். கலவரம் காரணமாக லொறி சுப்பிரமணியம் மில்லில் நிறுத்தப்பட்டிருந்தது. அன்று கெக்கராவையில் தங்கினோம். ஆகஸ்ட் 17ம் தேதி காலை கெக்கராவையில் குழப்பம் நடந்தது. 9 மணிக்கு மில்லை தாக்கினார்கள். நீலநிற வானில்வந்து தாக்குதல்நடத்தினார்கள். கொட்டன், கத்தி, வாள் கொண்டுவந்தனர். மில்லில் உள்ளவர்கள் காட்டுக்குள் ஓடினார்கள். கிருபாகரனும் ஓடினார். நானும் ஓடினேன். அதன்பின் செல்லையா வீட்டுக்குப் போனேன். பின் பொலிஸ் நிலையத்திற்கு வந்தோம்.

'காட்டில் 5தமிழர்கள்கொல்லப்பட்டதாக அறிந்தேன். கிருபாகரன் திரும்பிவரவில்லை. அவரும் கொல்லப்பட்டார் மற்ற லொறி எல்லாம் எரிக்கப்பட்டது. எங்கள் லொறி மட்டும் தப்பியது'

## கைக்குழந்தையுடன் சாட்சியமளித்தார்

மயிலிட்டியைச்சேர்ந்த சின்னத்தங்கம் கைம்பெண் ராசரத்தினம் கைக்குழந்தையுடன் அழுதுகொண்டே சாட்சியமளித்தார். சின்னத்தங்கம் கூறியதாவது:

"என் கணவர் லொறியில் கெக்கராவைக்கு சென்றார். சுப்பிரமணியம் மில்லில் தங்கினார். ஆகஸ்ட் 15ம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டவர் திரும்பிவரவில்லை ஐயா. கொழும்பிற்கு சென்றுவிட்டு யாழ்ப்பாணம் வரும் வழியில் கெக்கராவையில் தங்கினார். தம்பி ஐயா துரைராசா லொறியை ஓட்டிவந்தார்.

"18ம் திகதி காலை சுப்பிரமணியம் மில்லை தாக்கினார்கள் என்கணவர் காட்டிற்குள் ஓடிவிட்டார். டிரைவர் துரைராசாவும் காட்டிற்குள் ஓடினார். என் கணவர் திரும்பிவரவில்லை அவர் காட்டுக்குள் கொல்லப்பட்டார். அவரது சடலம்கூட கிடைக்கவில்லை. அச்சுவேலியைச் சேர்ந்த கந்தையா சின்னத்தம்பி குமாரசிங்கம் பலாலியைச் சேர்ந்த கந்தையா சின்னராசா கந்தசாமி கிருபாகரன் ஆகியோரும் காட்டுக்குள் கொல்லப்பட்டதாக அறிந்தேன்;

"எனக்கு ஐந்து பிள்ளைகள் மூத்தபிள்ளைக்கு 10 வயது. இந்த லொறியினால் தான் சீவியம் நடத்தினோம். எங்கள் லொறி எரிக்கப்பட்டுவிட்டது காட்டிற்குள் தமிழர்களை துண்டு துண்டாக குண்டர்கள் வெட்டிக் கொலை செய்து வாய்க்காலுக்குள் போட்டார்கள் என அறிந்தோம் எனக்கு எவ்வித நஷ்ட ஈடும் கிடைக்கவில்லை."

## நீண்ட தூர பஸ்களில் சிவில் உடையில் பொலிசார்

(கொழும்பு)
நீண்ட தூர பஸ்களில் அடிக்கடி நிகழும் கொள்ளைகளைத் தடுக்கும்பொருட்டு நீண்ட தூரம் சேவையில் ஈடுபடும் பஸ்களில் பொலிசாரை சிவில் உடையில் கடமையாற்ற அனுமதிப்பதெனப் பொலிஸ் தலைமைக் காரியாலயம் முடிவுசெய்துள்ளது

அண்மைக்காலமாக நீண்ட தூரப் பிரயாணிகளிடமும் நடத்துனர்களிடமும் ஆயுத முனையில் கொள்ளையடிக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதையடுத்தே பொலிசார் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர் (இ)

16-ம் திகதி ரயில்கள் தாக்கப்பட்டது தெரிந்தும்

# 17ம் திகதியாழ்தேவியையேன் சேவையில் ஈடுபடுத்தினர்?

கமிஷன் கவனிக்கவேண்டும், சாட்சியின் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
அனுராதபுரம் ரயில் நிலையத்தில் ஆகஸ்ட் 16-ம் தேதி நள்ளிரவு இரு ரயில்களில் தமிழர்கள் தாக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. அப்படியிருந்தும்; அதுதெரிந்தும் 17-ந்தேதிகாலை, கொழும்புகோட்டையிலிருந்து காலை 5-45 மணிக்கு தமிழ்ப் பிரயாணிகளுடன் யாழ். தேவியை புறப்பட புகையிரதப்பகுதியினர் அனுமதித்துள்ளனர். இதுபற்றி கமிஷன்கவனத்திற்கு எடுக்கவேண்டும்.

யாழ்ப்பாணம் மூன்றாம் கல்வி அதிபர் சின்னையா தணிகாசலம் சன்சோனி கமிஷன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. தணிகாசலம்சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: நான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஆகஸ்ட் 17-ம் தேதி காலை யாழ்தேவியில் புறப்பட்டேன். ரயில் பொத்துஹரவில் நிறுத்தப்பட்டது. நான் இறங்கினேன். தாக்கப்படவில்லை. மற்றும் தமிழ்ப் பிரயாணிகளை குண்டர்கள் தாக்குவதைக் கண்டேன். பிரயாணிகள் ரயிலிலிருந்து குதித்து ஓடினார்கள். பொத்துஹரவிற்கு ரயில் காலை 10 மணிக்கு வந்தது. ஒரு பிரயாணியைக் குண்டர் ஒருவர் உடைந்த போத்தலால் தாக்குவதைக் கண்டேன். சிலர் ரயிலில் ஏறிக்கொண்டிருந்தனர்.

## சூட்கேசைப் பறிக்கவில்லை

பின் ஒரு குண்டர் கூட்டம் வந்து 'நீ ஒரு தமிழனா?' என்று கேட்டனர். நான் 'ஆம்' என்றேன். உந்த மணிப்பேர்சை தா என்று பறித்தனர். மற்றொருவர் பாக்கெட்டுக்குள் கைவிட்டார். மற்றவர் என் கைக்கடிகாரத்தைப் பறித்தார். கடைசியில் என்னைப் போகலாம் என்றனர். பின் மற்றொரு கோஷ்டியினர் வந்து என்னைத் தள்ளினர் நான் விழுந்ததால் காயம் ஏற்பட்டது. என் சூட்கேசை அவர் பறிக்கவில்லை அவர்கள் அதனைத் தூக்காததற்குக்காரணம் அது பாரமாக இருந்திருக்கவேண்டும்.

பின் பல பிரயாணிகள் வயல் வெளியூடாக ரயில் நிலையத்திலிருந்து நடந்து செல்வதைக் கண்டேன். கடுமையாகத் தாக்கப்பட்ட ஒருவரைச் சந்தித்தேன். ஆறு மைல்களுக்கப்பாலுள்ள குருநாகலுக்கு நடந்துசெல்வது நல்லதென அவர் கூறினார். அப்போது ஒரு பஸ் வந்தது. நாங்கள் பஸ்ஸில் ஏறிக் குருநாகல் சென்றோம். குருநாகலில் 'வீரவாகு அன் கம்பனி' என்ற போர்டு ஒன்றைப் பார்த்தேன். அவர்கள் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள். நாங்கள் கடைக்குள் சென்றோம். வீரவாகுவின் மகன் சுந்தரலிங்கத்தைச் சந்தித்தேன். கடைக்குப் பாதுகாப்பு அளிப்பதாகப் பொலிஸ் அதிபர் கூறியிருப்பதாக அவர் தெரிவித்தார். நண்பகல் சாப்பாட்டுக்கு அங்கு நிற்குமாறு கூறினார். எனது காலில் வலியேற்பட்டது. நான் சாரத்தை மாற்றினேன், சப்பாத்தைக் கழற்றி, காயத்திற்கு மருந்து போட்டேன்.

## பொலிசார் வந்தனர்

பின்னர் 4 பொலிஸார் சைரினுடன் கடைக்கு வந்தனர். அவர்களைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்தோம். சில நிமிட நேரத்தில் பலர் பலத்த சத்தமிட்டபடி, கடையின் பின் கதவை உடைத்தார்கள். அப்போது பொலிசார் முன் கதவால் சென்றுகொண்டிருந்தனர். பின் கடையில் இருந்தவர்கள் ஒவ்வொருவராக வெளியேறிவிட்டனர். நானும் அவர்களுடன் போய்விட்டேன். சாரத்துடனும் சேட்டுடனும் வீதிக்குச் சென்றேன்.

## வானத்தை நோக்கி சுட்டனர்

இளைஞர் ஒருவர்வந்து "ஏன் நிற்கிறீர்கள் பொலிஸ் நிலையத்திற்கு போங்கள் என்றார். பொலிஸ் நிலையத்திற்குச் சென்றோம் எங்கள் கடைக்கு செல்ல ஏ.எஸ்.பி.யும் பொலிஸாரும் நின்றனர் குண்டர்கள், கொள்ளையடித்துக் கொண்டிருந்தனர். வீரவாகுவின் மகன்போய் ஏ.எஸ்.பிக்கு சொன்னார் உடனேவானத்தை நோக்கி 2தடவை சுட்டனர். கூட்டத்தினர் கலைந்து சென்றனர். போகும் வழியில், தமிழ் கடைகள் உடைக்கப்பட்டிருந்தன பொலிஸ் நிலையத்தில் 800 பேர் வரை இருந்தனர் நான் சுந்தரலிங்கம் வீட்டில் சென்று அன்றிரவு படுத்தேன். கொழும்புக்கு அகதிகளை கொண்டு செல்ல இரண்டு பஸ் வந்தது. நான் பொலிஸ் அதிபரை சந்தித்தேன் என் சூட்கேஸ், வீரவாகு கம்பெனியில் இருப்பதாகவும் அதனை எடுக்க வேண்டுமென்றும் கூறினேன். அவர் ஏற்பாடு செய்தார் போய் சூட்கேசை எடுத்துவந்தேன். பஸ்கள் போய்விட்டன.

அந்த பஸ்கள் கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் குண்டர்களால் தாக்கி கொள்ளையடிக்கப்பட்டதாக அறிந்தேன். நல்ல காலமாக நான்செல்லவில்லை.

19ம் தேதிகாலை மற்றொரு பஸ் புறப்பட்டது. அந்த பஸ்ஸை நேராக கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு போகுமாறு பொலிஸ் அதிபர் சொன்னார். நாங்கள் அந்த பஸ்ஸில் போய் கோட்டை பொலிஸ் நிலையத்தில் இறங்கினோம் எங்களை வீடுகளுக்கு அனுப்ப பொலிஸ் ஏற்பாடு செய்தது பின் விமானத்தில் வர டிக்கட் பதிவு செய்தேன்; அங்கும் தாமதம் ஏற்பட்டது. ரத்மலானைக்கு, டாக்ஸியிலோ, காரிலோ செல்வது பயமாக இருந்தது. கடைசியில் சரஸ்வதி மண்டப முகாமிற்கு சென்றேன் அங்கிருந்து 3பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதில் போனோம். பின் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தேன்.

(க)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு [illegible] 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegra[illegible] Eelanaadu. Telephone 389, Registered as a Newsp[illegible] Srilanka